# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

ilakku.org

வாராந்த மின்னிதழ்

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 296 | சனி, ஜீலை 20, 2024 | 16 பக்கங்கள்




## 1983 ஈழத்தமிழின அழிப்பின் நினைவேந்தலின் 41வது ஆண்டு என்று கிடைக்கும் இதற்கான அனைத்துலக நீதி?

அரசியல் ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்

## அவசரமாக வந்துள்ள 22 வது திருத்தம்!



## ரணில் வகுக்கும் திட்டம் தான் என்ன?

அகிலன்



## சாவகச்சேரியில் இருந்து சமூக விடுதலையை ஆரம்பிக்க வேண்டும்

அசாந்த் வடிவேல்




© 2024 இலக்கு இணையம்

# மிகவும் பலம்வாய்ந்தவரை நாம் களமிறக்குவோம் - மகிந்த




இலங்கை ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் யார் என்பது தொடர்பிலான அறிவிப்பை வெளியிடுவோம் என்று முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலை வருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

“ஜனாதிபதித் தேர்தலை வெற்றிக்கொள்ளும் வேலைத் திட்டம் எம்மிடம் உள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் நாம் வெற்றி பெறுவோம் என்பதே மக்களுக்கு கூறவேண்டிய நற்செய்தி. உரிய நேரம் வரும் போது எமது வேட்பாளர் யார் என்பதையும் அறிவிப்போம்” என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

“மிகவும் பலம்வாய்ந்த ஒரு வேட்பாளரை நாம் முன்னிறுத்த உள்ளோம்” என்றும் தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்ரமசிங்கவை வேட்பாளராக

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# முதலீடு தொடர்பான பிரச்சனை சயனைட் மூலம் 6 பேர் கொலை



முதலீடுகள் தொடர்பான பிரச்சனை காரணமாக தாய்லாந்தில் உள்ள ஆடம்பர விடுதி ஒன்றில் ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளதாகதாய்லாந்து காவல்துறையினர் கடந்த புதன் கிழமை(17) தெரிவித்துள்ளனர்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் உள்ள கிரான்ட் ஹையட் எறவான் என்ற ஆடம்பர விடுதியிலேயே இந்த சம்வபம் இடம்பெற்றுள்ளது. இறந்தவர்கள் இருந்த அறையை சோதனை செய்ய காவல்த்துறையினர் அங்கு மிக விரைவாக கொல்லும் சயனைட் என்ற இரசாயணப் பொருட்கள் காணப்பட்டதை அவதானித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் கொலையாளியும் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் எங்கிருந்து சயனைட்டை பெற்றார்கள் என்ற விசாரணைகளை காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# திருமலையில் போதை மாத்திரைகளுடன் அண்ணன் தம்பி இருவர் கைது



திருகோணமலை உப்பு வெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்போபுர பகுதியில் போதை மாத்திரைகளுடன் அண்ணன் தம்பி என இருவர் சர்தாபுர விசேட அதிரடிப் படையினரால் கடந்த புதன்கிழமை(17) கைது செய்யப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் வயது (26,28)உடைய அண்ணன் தம்பி என பொலிஸார் தெரிவித்தனர். இவர்களிடமிருந்து 362 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# ட்ரம்பின் பாதுகாப்பில் தவறுகள் – ஒப்புக்கொண்டது இரகசியப் பிரிவு



அமெரிக்காவில் இடம்பெறவுள்ள அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிடும் குடியரசுக்கட்சி வேட்பாளர் டொனால்ட் டிறம்பின் பாதுகாப்பில் தவறுகள் மேற்கொண்டுள்ளதை அமெரிக்காவின் இரகசியப் பிரிவு எனப்படும் அரச தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்புக்களை வழங்கும் அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

தாக்குதலாளி தாக்குதலை மேற்கொண்ட நிறுவனத்தின் கூரைப் பகுதி சரிவாக இருந்ததால்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இலங்கை அரசு தொடர்ந்து சிறுபான்மை மக்களை துன்புறுத்துகின்றது

## கண்காணிப்பகம்



இலங்கை அரசு பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை தொடர்ந்து பயன்படுத்தி தனக்கு எதிரானவர்களையும், சிறுபான்மை மக்களையும் துன்புறுத்தி வருவதாக அமெரிக்காவின் வொசிங்டனைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்த புதன்கிழமை(17) வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எழுந்தமானமான கைது மற்றும் தடுத்து வைத்து துன்புறுத்துவது போன்றவற்றால் பலர் நீண்ட

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# ஆயுதக் கட்டுப்பாட்டு பேச்சுக்களில் இருந்து விலகியது சீனா





சீனாவுக்கு எதிராக அமெரிக்க அரசு தாய்வானுக்கு ஆயுதங்களை தொடர்ந்து வழங்கிவருவதால் அமெரிக்காவுடனான ஆயுதக் கட்டுப்பாட்டு பேச்சுக்களை நிறுத்திக்கொள்வதாக சீனாவின் வெளிவிவகாரஅமைச்சுதெரிவித்துள்ளது.

அணுவாயுதக்கட்டுப்பாடு தொடர்பான பேச்சுக்களை அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய வல்லரசுகள் மேற்கொண்டு வந்திருந்தன. கடந்த 2018 ஆம் ஆண்டுக்கு பின்னர் அது கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் அமெரிக்காவின் நாடாளுமன்றப் பேச்சாளர் நான்சி பெலொசியின் தாய்வான் பயணத்தின் பின்னர் அது தடைப்பட்டிருந்தது.

ஆயுதக்கட்டுப்பாட்டு உடன்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# ஹதீஸின் தாக்குதல்– மூடப்படும் இஸ்ரேலிய துறைமுகம்



ஏமனின் ஹதீஸ் அமைப்பினரின் தாக்குதல் காரணமாக இஸ்ரேலின் எலட் துறைமுகத்தின் பணிகள் கடந்த எட்டு மாதங்களாக முடக்கப்பட்டுள்ளதால் துறைமுகத்தில் பணியாற்றும் 50 விகிதமான பணியாளர்களை பணியில் இருந்து நிறுத்துவதற்கு துறைமுக நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

செங்கடலில் ஹதீஸ் அமைப்பினரால் கப்பல்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்கள் காரணமாக கடந்த எட்டு மாதங்களாக துறைமுகத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இஸ்ரேலுக்கு கார்களை இறக்குமதி செய்வதில் இந்த துறைமுகம் முக்கிய பணியை ஆற்றிவந்துள்ளது. கடந்த வருடம் 150,000 கார்கள் அங்கு இறக்கப்பட்டன. ஆனால் இந்த வருடம் ஒரு கார் கூட

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# உலகின் மதுபான விற்பனையில் சீனா முதலிடம்



உலகின் மாதுபான உற்பத்தி மற்றும் விற்பனை தொழில் 730 பில்லியன் டொலர்களை 2022 ஆம் ஆண்டு ஈட்டியுள்ளது. அதன் மூலம் உலகில் 36 மில்லியன் வேலைவாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. அதில் சீனாவின் பங்களிப்பு 215 பில்லியன் டொலர்கள் என ஜெனீவாவைத் தளமாகக் கொண்ட உலக மதுபான கூட்டணி என்ற அமைப்பு தனது 2024 ஆம் அண்டுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உலகின் பொருளாதார வளர்ச்சியிலும், நாடுகளின் வரித்துறையின் நிதி வளர்ச்சியிலும் மதுபானத் துறை அதிக பங்களிப்பை வழங்கி வருகின்றது. 2022 ஆம் ஆண்டு தகவல்களின் அடிப் படையில் சீனா முன்னியில் உள்ளது. அதன் பங்களிப்பு 215 பில்லியன்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தமது சொந்த மக்களை தோற்கடித்த தமிழ் அரசியல்வாதிகள்



அரசியல்வாதிகள் இறுதியாக மக்களைத் தோற்கடித்துள்ளனர் ஆனால் மக்களுக்கு ஒரு அடிப்படை விளிப்புணர்வை நான் ஏற்படுத்தியுள்ளேன், நான் அரசியலுக்கு வரப்போவதில்லை ஆனால் சாவகச்சேரிக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தேவை அதன் தேவையை தான் அந்த மக்கள் சந்தித்து நிற்கும் அவலம் எடுத்துக்காட்டுகின்றது என தெரிவித்துள்ளார் சாவகச்சேரி தள வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் இராமநாதன் அர்ச்சுனா.

அவர் கூறிய கருத்துக்கள் அனைத்தும் முற்றிலும் சரியானவையே, வடபகுதியை மத்திய அரசுடன் இணைக்கும் திட்டத்திற்கு அமைவாக இலங்கை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ் போதனாவைத்தியசாலையை வைத்தியர் சத்தியமூர்த்தியின் ஆதரவுடன் பலப்படுத்தி வரும் இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கம் தான் மாகாண அரசின் கீழ் வரும் வைத்தியசாலைகளை அழிப்பது.

அதனை மேற்கொள்வதற்காக பல தனியார் வைத்தியசாலைகளை நிறுவி அதன் மூலம் புலம்பெயர் மக்களின் பணங்களை தனியார் முதலாளிகள் கையகப்படுத்தவும், அவர்களின் வரிப்பணம் மூலம் அரசு இலபம் சம்பாதிப்பதும் அடுத்த திட்டம்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சென்ற நோயாளிக்கு சிகிச்சை அளிக்கவில்லை

## தலையிட்டது மனித உரிமைகள் ஆணைக்குழு!



நபர் ஒருவருக்கு விசப்பூச்சி கடித்த நிலையில் அவரை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அங்கு சிகிச்சை வழங்குவதற்கு யாரும் இருக்கவில்லை என்ற பிரச்சினை எழுந்துள்ள நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம் இது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் அவர்கள் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த 17.07.2024 அன்று இரவு விசபூச்சியின் கடிக்குள்ளான தனது தந்தையினை சிகிச்சைக்காக கொண்டு சென்ற வேளையில் மருத்துவமனையில் இரவு வேலைகளில் மருத்துவர்களோ, தாதியர்களோ இருக்கவில்லை.

இந்நிலையில் யாரும் அங்கு இல்லாத காரணத்தினால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் செய்திகள் பிரசுரிக்கப்பட்டன.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

# இவ்வார இலங்கை மற்றும் உலக நிகழ்வுகள் சில ஈழத்தமிழர் இறைமையைப் பாதுகாப்பதற்கான வழிகளைக் காட்டுகின்றன

அரசமைப்பின் 22வது திருத்தத்தை ஜனாதிபதி தேர்தல் நடக்கும் வரை வெளியிட வேண்டாம் என்ற நீதியமைச்சர் விஜயதாச ராசபக்சாவின் கோரிக்கையை நிராகரித்துச் சிறிலங்கா ஜனாதிபதி அதனை வர்த்தமானியில் யூலை 19ம் திகதி வெளியிட்டுள்ளார். அமைச்சரவையுடன் முரண்பாட்டுடனும் தனது நிறைவேற்று அதிகாரத்தில் சிறிலங்கா ஜனாதிபதி தான் நினைத்ததைச் செய்யும் சர்வாதிகாரியாகவே இன்று செயற்படுகின்றார். இந்தப் போக்கில் செயற்பட்டுத்தான் 1978 முதல் 1983க்கு இடையில் இவரின் கிட்டிய குடும்ப உறுப்பினரும் அரசியல் குருவுமான முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தனா சர்வாதிகாரச் சட்டங்களான எதிர்க்கட்சியை செயற்படாதவாறு சிறிமாவோவின் குடியுரிமையைப் பறித்த சட்டம் ஈழத்தமிழரைக் கண்ட இடத்தில் சுடவும், சுட்ட இடத்தில் எரிக்கவும் படைகளுக்கு அதிகாரமளித்த 1979ம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச்சட்டம், தன்னுடைய ஆட்சி நீடிப்பு என்பவற்றையெல்லாம் செய்து இறுதியில் தனது சர்வாதிகாரத்தைச் சிங்கள பௌத்த பற்றாகத் திசை திருப்ப 1983 யூலை ஈழத்தமிழின அழிப்பையும் நடாத்தினார் என்பது வரலாறு.

இன்றைய ஜனாதிபதியும் தனது தோல்விகள் உறுதியாகையில் மீளவும் ஈழத்தமிழின அழிப்பு முயற்சிகளால் சிங்கள பௌத்த பேரினவாத ஆதரவைத் தேடக் கூடிய அபாயம் உள்ளது என்பது இலக்கின் அச்சமாக உள்ளது. இதனால் ஈழத்தமிழர் தங்கள் இருப்பையும் இறைமையும் பாதுகாக்கக் கூடிய சட்டகமொன்றை ஏற்படுத்துவது மிக முக்கியம். கடந்த சனவரி மாதம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு உலகிற்கு நல்லிணக்கத்துடன் உண்மை கண்டறியும் தனது முயற்சியென்று சிறிலங்கா ஜனாதிபதி செய்த பரப்புரையின் உண்மைத்தன்மையை, 2016-18க்கு இடையில் ரமணி முத்தெட்டுக்கம தலைமையிலான ஆலோசனை செயலணியால் தயாரிக்கப்பட்ட பழைய கோப்புதான் உத்தேச உண்மை ஒற்றுமை நல்லிணக்க ஆணைக்குழு சட்ட மூலவரைபு என்ற இன்றைய உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்காலச் செயலகத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி அசங்க குணவன்சாவின் கூற்று உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாறுதான் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆரும் இந்தியாவின் பாதுகாப்புக்காகச் செய்து கொள்ளப்பட்ட இந்தோ சிறிலங்கா உடன்படிக்கையை இந்தியா சிறிலங்காவின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பேணும் காப்புச் சட்டமாகத் தனது நரித்தந்திர அரசியலால் மாற்றினார் என்பது வரலாறு. இவ்விடயத்தில் இந்தியா உட்பட்ட அனைத்த நாடுகளுடனும் ஈழத்தமிழர்கள் தங்கள் உரையாடலைத் தொடங்கினால்தான் இனியும் நாடுகள் தங்கள் நலன் சார்ந்து ஈழத்தமிழர் இறைமை ஒடுக்கத்தைச் செய்யாது பாதுகாக்கலாம் என்பது இலக்கின் எண்ணம்.

"எமது நிலப்பரப்பையோ அல்லது கடற்பரப்பையோ இந்தியாவின் நியாயபூர்வமான பாதுகாப்பு அக்கறைகளுக்கு எதிரான விதத்தில் மூன்றாம் தரப்பொன்று பயன்படுத்துவதற்கு நாம் ஒருபோதும் இடமளியோம். இருப்பினும் இந்தியா 'பிரிக்ஸ்' போன்ற சில பொதுக்கட்டமைப்புக்களில் சீனாவுடன் இணைந்து பணியாற்றுவது போல சிறிலங்காவும் அதன் பங்காளிகளுடன் இணைந்து செயலாற்ற விரும்புகிறது" எனச் சிறிலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி அனைத்துலக ஊடகமொன்றுக்கு இந்தியா குறித்த சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கையைத் தெளிவுபடுத்திச் செவ்வியளித்துள்ளார். இதன்வழி பாரத் சிறிலங்கா கூட்டாண்மையையும் சீனா அமெரிக்கா உட்பட்ட மற்றைய நாடுகளுடன் பங்காண்மையையும் உடையதாக தனித்துவமான இறைமையற்ற இறைமைப் பகிர்வு கொண்ட அரசாங்கமாக இன்றைய சிறிலங்கா அரசாங்கம் உள்ளது என்ற நடைமுறை அரசியலை அவர் வெளிப்படுத்தியுள்ளார். ஈழத்தமிழர்களும் தங்களின் அறிவாற்றலை நிதிப்பலத்தை அனைத்துலக மக்களுடனும் நாடுகளுடனும் பகிர்ந்து கூட்டாண்மை பங்காண்மைகளை வளர்க்க வேண்டுமென்பது இலக்கின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இதற்கிடையே கடந்த வாரத்தில் மௌனமான முறையில் ஈழத்தமிழரின் இறைமையை அறிவார்ந்த நிலையில் இல்லாமல் செய்யும் வகையில் சிறிலங்கா இந்திய உதவியுடன் பௌத்த புராணமரபாக உள்ள மகாவம்சத்தை உலக வரலாற்று ஆவணமாக கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ வின் பணிப்பாளர் ஒன்ரே அசோலே அவர்களால் யூலை 17ம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வைத்து அதன் வேந்தர் பேராசிரியர் ஜி. எச். பீரிஸ் துணைவேந்தர் பேராசிரியர் எம். டீலமாவங்ச மற்றும் நூலகர் ஆர். மகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் 'உலக பாரம்பரிய சின்னமாகப்' பிரகடனப்படுத்த வைத்ததின் மூலமாக மாற்றியுள்ளது. "மகாவம்சமானது இலங்கை வரலாறு குறித்து மாத்திரமின்றி உலக வரலாற்றின் பல முக்கிய தகவல்களை உள்ளடக்கிய கையெழுத்துப் பிரதி" என ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ வின் பணிப்பாளர் ஒன்ரே அசோலே பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தெரிவித்துள்ளமை மகாவம்சத்தின் சிங்கள பௌத்த பேரினவாத வெளிப்பாட்டுக்கு உலகப் பல்கலைக்கழக மட்ட ஏற்புடைமையை உறுதிப்படுத்தும் வரலாற்றுத் திரிபுவாதமாக மாறியுள்ளது. இந்தத் தவறுகள் நிகழ்வதற்கு ஈழத்தமிழர்கள் தங்கள் வரலாறு பண்பாடு பொருளாதாரம் தத்துவங்கள் குறித்த உயராய்வுக் கட்டமைப்பு ஒன்றை உலகில் ஏற்படுத்தாது காலத்தை விரயமாக்குவதே காரணமாகிறது என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

இந்த வரலாற்றுத் திரிபுவாத முயற்சிகள் வரிசையில் சிறிலங்காவின் முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட பொழுது வடக்கு கிழக்கில் தமிழர்கள் தனக்கு வாக்களித்தமை தான் விடுதலைப்புலிகளிடம் இருந்து அவர்களை மீட்டமைக்கான நன்றிச் செயல் எனத் தெற்கில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கடந்த வாரத்தில் கூறியுள்ளமையும் அமைகிறது. இனஅழிப்பை நடாத்திய அதே சிங்களக் கட்சிகள் தான் இன்று ஈழத்தமிழர்களை தேர்தலில் வாக்களிக்கக் கோரி வருகின்றனர். ஈழத்தமிழர் தாயகத்தில் இன்று நிலை கொண்டுள்ள பெருந்தொகையான சிறிலங்காப்டையினரும், வாழும் ஈழத்தமிழர் அல்லாதவர்களும் ஈழத்தமிழர்களின் அரசியலுடன் முரண்பாடு உள்ளவர்களும் வாக்களித்தாலும் அது தமிழர் தாயகத்தில் ஈழத்தமிழர்கள் சிறிலங்காவின் தேர்தலில் பங்குபற்றிய வீதமாகவே வெளிப்படுத்தப்படும். நாளை இன்று சரத் பொன்சேகா கூறியவாறே உலகுக்கு சிங்களர் கூறுவர். இதனைத் தவிர்ப்பதற்காகவே ஈழத்தமிழர்கள் சார்பில் அவர்கள் சிறிலங்கா அரசாங்கத்தின் இந்தத் தேர்தலை ஏற்கவில்லையென்ற கொள்கைப் பிரகடனத்துடன் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் மூலம் அவருக்கு அளிக்கப்படும் வாக்குகளையும் அளிக்கப்படாது விடப்படும் வாக்குகளையும் சேர்த்து கூட்டு மொத்தமாக ஈழத்தமிழர்கள் சிறிலங்கா அரசாங்கத்தை ஏற்கவில்லையென்று மக்களாணையை வெளிப்படுத்தலாம் என்ற முயற்சியில் 50க்கு மேற்பட்ட ஈழத்தமிழரின் குடிசார் அமைப்புக்கள் இறங்கியுள்ளன. இந்த மக்களாணை ஈழத்தமிழரின் வெளியகத் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அனைத்துலக நாடுகளும் அமைப்புக்களும் ஈழத்தமிழர்களுக்குத் தன்னாட்சி உரிமையினைப் பயன்படுத்தி; தங்களுடைய தாயகத்தில் தங்களின் தேசியத்தைப் பேணி தங்களுக்கான அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிப்பதற்கு உதவும் என்பது இவர்களின் நம்பிக்கை. ஈழத்தமிழர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது முக்கியம் என்பது இலக்கின் எண்ணமாக உள்ளது.

இறுதியாக ஒரு நாடு அல்லது இனம் அபாயங்களை வன்முறைகளைச் சந்திக்கும் பொழுது அந்த நாட்டின் அல்லது இனத்தின் நட்பு நாடுகளுடன் அல்லது இனத்துவ உறவுகளுடன் இணைந்த பங்காண்மையுடன் கூடிய கூட்டாண்மையுடனாலேயே அதனை வெல்ல முடியும். இதுவே ஒக்ஸ்வேர்ட்டில் பிளனம் கோட்டையில் நிகழ்ந்த ஐரோப்பிய நாடுகளின் அரசியல் சமுதாயத்தின் 4வது மாநாடு தெளிவாக்கியது. 50 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட இந்த அமைப்பு உக்ரேன் மேலான படையெடுப்பை ரஸ்யா தொடங்கிய 2022 இல் ஐரோப்பிய அளவிலான பாதுகாப்புக்காகக் கட்டமைக்கப்பட்ட ஒன்று. ஈழத்தமிழரும் உலகத் தமிழராகப் பலநாடுகளில் உள்ள நிலையில் இத்தகைய ஒரு ஈழத் ஈழத்தமிழர் அரசியல் சமூகம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதே இலக்கின் எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# அவசரமாக வந்துள்ள 22 வது திருத்தம்!



# ரணில் வகுக்கும் திட்டம் தான் என்ன?

அகிலன்

கடந்த காலங்களில் இல்லாதளவுக்கு குழப்பம் நிறைந்ததாக இவ்வருடம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் அமையப் போகின்றது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய அண்மையில் தெரிவித்திருந்தார். இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஜனாதிபதி ஒருவர் இரண்டரை வருடங்களில் பதவியிலிருந்து துரத்தப்பட்ட பின்னர் இடம்பெறும் முதலாவது தேர்தல் என்பது மட்டும் இதற்குக் காரணம் அல்ல. இவ்வருட ஆரம்பத்திலேயே இந்தக் குழப்பங்கள் ஆரம்பமாகிவிட்டன. இதில் 22 ஆவது திருத்தம்தான் பிந்திய குழப்பம்!



அரசியலமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கான வர்த்தமானி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின்படி வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டிருக்கின்றது. 22 குறித்த வர்த்தமானி வெளியிடப்படாது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் அறிவித்திருந்தார். மற்றொரு அமைச்சராக மகிந்த அமரவீர 22 நாடாளுமன்றத்துக்கு வரப்போவதில்லை என்று அறிவித்திருந்தார். ஆனால், எதிர்க்கட்சிகள் எவையும் எதிர்பார்க்காத நேரத்தில் இந்த வர்த்தமானி வெளிவந்திருப்பது எதிர்க்கட்சிகளுக்கும் மனித உரிமைகள் அமைப்புக்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவ்விடயத்தில் ரணிலின் நகர்வுகள் குறித்து சந்தேகங்கள் உருவாகுவது இயல்புதான்.

அரசியலமைப்பில் சர்ச்சைக்குரியதாக இருக்கின்ற 83 (ஆ) பிரிவை மாற்றுவதற்காகத்தான் இப்போது அரசியலமைப்புக்கான 22 ஆவது திருத்தம் பிரேரிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் இணைந்து இந்தத் திருத்தத்தைத் தயாரித்ததாகச் சொல்லப்படுகின்றது. இது அமைச்சரவையின் அங்கீகாரத்தை இந்த வார முற்பகுதியில் பெற்றிருந்தாலும் கூட, தற்போதைய நிலையில் இதனை வர்த்தமானியில் வெளியிடுவதில்லை என்றுதான் அரசாங்கத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஆறு ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கும் 19 ஆவது திருத்தம் 2015 இல் கொண்டுவரப்பட்ட போது, இந்தப் பிரிவும் அரசியலமைப்பு நிபுணர்களின் கவனத்தைப் பெற்றிருந்தது. இதனைத் திருத்த முற்பட்டால், அதற்கு சர்வஜன வாக்கெடுப்பின் மூலமாக மக்களின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தெரிவிக்கலாம் என்ற கருத்து அப்போது முன்வைக்கப்பட்டது.

19 ஆவது திருத்தத்தை வெறுமனே நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மட்டும் நிறைவேற்றி முடிப்பது என்ற எண்ணம் இருந்தமையால் இந்தப் பிரிவில் கை வைக்காமல் அதனை அப்படியே விட்டு விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதனால் எந்தவிதமான குழப்பங்களும் ஏற்படாது என்ற அரசியலமைப்பு நிபுணர்களின் கருத்தும் இந்தத் தீர்மானத்துக்குக் காரணமாக இருந்தது.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க இதனைப் பயன்படுத்தலாம் என்ற கருத்துக்களின் அடிப்படையில்தான் இரு மாதங்களுக்கு முன்னதாக 19 ஆவது திருத்தச் சட்டமும், 83 (ஆ) பிரிவும் மீண்டும் ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டன. மைத்திரிபால சிறிசேன தன்னுடைய பதவிக்கால இறுதியில் இந்த சர்ச்சையைப் பயன்படுத்தி தனது பதவிக்காலத்தை ஆறு வருடங்களாக நீடிப்பதற்கான முயற்சி ஒன்றை 2019 இல் மேற்கொண்டார்.

19 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் அவர் தனது பதவிக் காலத்தை நீடிக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் அப்போது தனது வியாக்கியானத்தில் தெரிவித்திருந்தது. தற்போதும், 19 ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளையும், 83 (ஆ) பிரிவையும் சுட்டிக்காட்டி ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் இரண்டு மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால், இரண்டு மனுக்களுமே நிராகரிக்கப்பட்டன. ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள்தான் என்பது உயர் நீதிமன்றம் மீண்டும் உறுதியாகத் தெரிவித்துவிட்டது.

அதாவது, 83 (ஆ) பிரிவை மாற்றியமைப்பதற்காக மற்றொரு அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டிய எந்த அவசரமோ -அவசியமோ இல்லை என்பதுதான் இதன் சாரம்சம். இப்போது ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக் குழுவுக்குக் கிடைத்துவிட்டது. தேர்தல் குறித்த திகதிகளை அடுத்த வாரத்தில் வெளியிடப் போவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துவிட்டார். அத்துடன், 83 (ஆ) பிரிவை மாற்ற வேண்டிய அவசியம் எதுவும் உருவாகவும் இல்லை. அது அவசியமற்றது என உயர் நீதி மன்றமே அறிவித்துவிட்டது.

இந்த நிலையில்தான் அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ஷ, மகிந்த அமரவீர ஆகியோர் 22 ஆவது திருத்தம் வரப்போவதில்லை எனத் தெரிவித்திருந்தார்கள். அது குறித்த வர்த்தமான அறிவித்தலை வெளியிட வேண்டாம் என்று அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தமது அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டும் இருந்தார். அவர்கள் அவ்வாறு சொல்லி 24 மணி நேரத்துக்குள் ஜனாதிபதியின் அவசர உத்தரவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுவிட்டது.




ஜனாதிபதித் தேர்தல் செயற்பாடுகள் சூடுபிடித்திருக்கும் நிலையில் அவசரமாக ஜனாதிபதி இதனை வெளியிட்டதன் நோக்கம் குறித்து எதிர்க்கட்சிகள் சந்தேகிக்கின்றன. கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் இதற்கு எதிரான கருத்துக்களே முன்வைக்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு எதிர்வரும் வாரம் உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கும் அல்லது தேர்தல் பணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலும் இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சியினரும், சிவில் அமைப்பினரும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 22 ஆவது திருத்த வரைவை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஜனாதிபதியின் பதவிக் காலத்துடன் தொடர்புடைய ஒரு விடயத்துக்குச் சர்வஜன வாக்கெடுப்பு கோரும்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகள் நெருக்கடிக்குள்ளாகும் என்று எதிர்த்தரப்பினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

22 ஆவது திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் வாரம் முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 14 நாட்களுக்குள் இலங்கைப் பிரஜைகள் எவரும் சட்டமூலத்தைசவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலை 22 எந்த வகையிலும் பாதிக்காது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியிருக்கின்றார். அடுத்த வாரம் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளிவரும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதியின் நகர்வுகள் சந்தேகத்துடன் பார்க்கப்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# முட்டி மோதிக் கொள்ளும் தமிழரசு பொதுவேட்பாளரை ஆதரிக்குமா?

**ஜனாதிபதித் தேர்தல் குறித்த திகதிகளை அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு கிடைத்திருக்கின்றது. கட்சிகளின் செயற்பாடுகளும் சுறுசுறுப்படைந்திருக்கின்றன. தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயமும் பேசப்படுகின்றது. இந்தப் பின்னணியில் அரசியல் ஆய்வாளர், பத்திரிகையாளர், என்பவற்றுக்கு மேலாக தமிழ் மக்கள் பொதுச் சபையின் தீவிர செயற்பாட்டாளருமான யதீந்திரா அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



**ஜனாதிபதித் தேர்தல் குறித்த முக்கிய அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு இம்மாத இறுதியில் வெளியிடவுள்ளது. இப்போது தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் எந்த நிலையில் உள்ளது?**

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற விடயம் உரையாடல் நிலையில் தான் இருக்கின்றது. அந்த விடயத்தில் பல்வேறு தளங்களில் நான்கு மாதங்களுக்கு மேலாக நாங்கள் பணியாற்றியிருந்தாலும் கூட, பொதுக் கட்டமைப்பை அமைப்பது என்ற முயற்சி இன்னமும் நிறைவுபெறவில்லை. தமிழ்க் கட்சிகளும், தமிழ் சிவில் சமூக அமைப்புகளை இணைத்த தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்து அவ்வாறான கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளன. அதற்குப் பின்னர்தான் யாரை நிறுத்துவது, என்ன சின்னத்தில் போட்டியிடுவது என்பன குறித்து நாம் ஒரு முடிவுக்கு வரமுடியும். அந்த விடயத்தை நோக்கிச் செல்வதற்கு ஆங்காங்கே சில தடைகள் உள்ளன. அவற்றைத் தாண்டிவிட்டால் இந்த விடயம் அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்லும்.

பொது வேட்பாளர் என்ற விடயம் ஆரம்பத்திலிருந்த தீவிரத் தன்மையை இழந்திருப்பது போன்ற ஒரு தோற்றம் காணப்படக்கூடும். அதற்குக் காரணம் கொள்கை அடிப்படையில் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டிருக்கின்ற கட்சிகளும், தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்து அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்வதில் கால தாமதம் ஏற்பட்டிருக்கின்றது. அதனால்தான் இந்த தொய்வு நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், தமிழ் மக்கள் பொதுச் சபை தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கின்றது. அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதில் பயணிக்கக்கூடியவர்களை இணைத்துக்கொண்டு செல்ல வேண்டும் என்பதில் தனது தொடர்ச்சியான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

**பொது வேட்பாளர் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை கடந்த 6 ஆம் திகதி கைச்சாத்திடப்படும் எனக் கூறப்பட்டது. பின்னர் 17 ஆம் திகதி என்று சொல்லப்பட்டது. இது தொடர்ந்து ஒத்திவைக்கப்படுவதற்கு என்ன காரணம்?**

ஆம். கடந்த 6 ஆம் திகதி இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதாக இருந்தது. வவுனியாவில் தமிழ்க் கட்சிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் காணப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், புரிந்துணர்வு உடன்படிக்கையும் இறுதி செய்யப்பட்டிருந்தது. அந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதை ஒரு நிகழ்வாக செய்ய வேண்டும் என்று கட்சிகளிடமிருந்து ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்ட காரணத்தினால், 6 ஆம் திகதி அந்த நிகழ்வைச் செய்வதற்குத் திட்டமிட்டிருந்தோம். பின்னர் சம்பந்தன் அவர்களுடைய இறுதி நிகழ்வு அந்தக் காலத்தில் இடம்பெற்றதால் அந்த நேரத்தில் இதனைச் செய்வது பொருத்தமாக இருக்காது என்ற ஒரு கருத்து அரசியல் கட்சிகள் மத்தியில் இருந்தது. அதன்பின்னர் கட்சிகளுக்கும் பொதுச் சபைக்கும் இடையில் புதிய நேரம் ஒன்றை ஏற்பாடு செய்வதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

பல தரப்பட்ட கட்சிகளை ஒருங்கிணைத்து இவ்வாறான நிகழ்வு ஒன்றைச் செய்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது. ஆனால், விரைவில் இது சாத்தியமாகும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**வடக்கு, கிழக்கின் பல பகுதிகளிலும் பொது வேட்பாளர் என்ற கருத்தை முன்னிலைப்படுத்தும் தமிழ் மக்கள் பொதுச் சபை பல சந்திப்புக்களை நடத்தியுள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் இந்தக் கருத்துக்கு எந்தளவுக்கு வரவேற்பு உள்ளது?**

தமிழ் மக்கள் மத்தியில் இந்தக் கருத்துக்கு எந்தளவுக்கு ஆதரவு இருக்கிறது என்பதை என்னால் துல்லியமாகச் சொல்ல முடியாது. ஏனென்றால், இவ்வாறு பல சந்திப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன. இவ்வாறான சந்திப்புக்களில், இதற்காகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களின் அழைப்பின் பேரில்தான் பலர் வருகின்றார்கள். ஆனால், பிரசார நடவடிக்கையாக கிராமங்களுக்கு நாம் செல்லும் போதுதான் மக்கள் இது தொடர்பாக எவ்வாறான பார்வையைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை எம்மால் அறிய முடியும். அந்தளவுக்கு நாம் இப்போது இல்லை. ஏனென்றால், அந்தளவுக்கு நாம் இன்னும் இறங்கிப் பணியாற்றவில்லை.

இது உண்மையில் ஒரு அரசியல் வேலைத் திட்டம். இது ஒரு சிவில் சமூக வேலைத்திட்டம் இல்லை. பொதுவாக தமிழ்ச் சூழலில் அரசியல் வேலைத் திட்டங்களை அரசியல் கட்சிகள் இல்லாமல் செய்வதில்லை. இந்த அரசியல் கட்சிகளும், சிவில் சமூகமும் ஒன்றிணைந்து வலுவான கட்டமைப்பாக மக்கள் மத்தியில் பிரசன்னமாகும் போதுதான் இது ஒரு பாரதூரமான விடயம் என்ற கருத்து மக்கள் மத்தியில் ஏற்படும். இதனைச் செய்ய முடியாமல் இருப்பதற்கு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படாமல் இருப்பதும் ஒரு காரணம்.

இப்போது பொதுமக்கள் மத்தியில் செல்லும் போது சிவில் சமூகமாகத்தான் நாங்கள் செல்கின்றோம். அரசியல் கட்சிகள் இதில் இணையவில்லை. அவ்வாறு சிவில் சமூகமும், அரசியல் கட்சிகளும் தோன்றுகின்ற போதுதான் இது ஒரு அரசியல் வேலைத்திட்டம் என்ற செய்தி மக்களுக்குச் செல்லும். அதனால், மக்கள் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்கள் என்று இப்போது துல்லியமாகச் சொல்ல முடியாது. சந்திப்புக்களில் வரும் மக்கள் ஆர்வமாகப் பேசுகின்றார்கள். பரவலாக உரையாடல்களைச் செய்யும் போதுதான் மக்கள் எவ்வாறானநிலைப்பாட்டில்உள்ளார்கள்என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். அதேவேளையில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் மக்கள் மத்தியில் ஒரு சரிசனை இன்னும் மக்கள் மத்தியில் ஏற்படவில்லை.

**ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவருமே இப்போது சிறுபான்மையினரை நோக்கி வரத் தொடங்கியுள்ளார்கள். அதிகளவுக்கு வாக்குறுதிகளை வழங்குகின்றார்கள். இது இந்த பொது வேட்பாளர் என்ற கருத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாதா?**

உண்மையில் பொது வேட்பாளர் என்ற விடயத்தை நாம் கையில் எடுத்த போது, எமக்கு நிச்சயமாகத் தெரியும் தென்னிலங்கை வேட்பாளர்கள் வாக்குறுதிகளுடன் வருவார்கள் என்று. அவ்வாறு அவர்கள் வருகின்றார்கள். கடந்த காலங்களைப் போல அல்லாமல், இப்போது அவர்களுடைய வாக்குறுதிகள் மிகவும் தெளிவாக இருக்கின்றது.

வெளிப்படையாக 13 என்ற மட்டுப்பாட்டுடன் அவர்களுடைய வாக்குறுதிகள் இருக்கின்றது. முன்னைய காலங்களில் அவ்வாறு இருக்கவில்லை. பொதுப்படையாகத்தான் அவர்களுடைய கருத்துக்கள் இருந்தது. தேர்தல் முடிந்தவுடன் சில விடயங்களைச் செய்வோம். ஆகவே எங்களை நம்புங்கள் என்ற அடிப்படையில்தான் இதுவரையில் அவர்கள் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்தார்கள். 2015 ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால், தமிழ் மக்களுக்கு அதி உச்சமான அரசியல் தீர்வு என்ற விடயங்கள்தான் அங்கு பேசப்பட்டன.

இப்போது ரணில் விக்கிரமசிங்கவே தெளிவாகக்கூறியிருக்கின்றார். 13 இல் உள்ள பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த அனைத்தையும் நடைமுறைப்படுத்தத் தயார் என்று சொல்கின்றார். ஆனால், சஜித் பிரேமதாச 13 ஐ முழுமையாக அமுல்படுத்துவதாகச் சொல்கிறார். பொலிஸ் குறித்து அவர் எதனையும் பேசவில்லை. ஆனால், ரணிலைவிட தன்னால் அதிகமாகத் தரமுடியும் எனக் காட்ட அவர் முற்பட்டிருக்கின்றார். ஆனால், அவரும் எல்லைக் கோடாக வைத்திருப்பது 13

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## 1983 ஈழத்தமிழின அழிப்பின் நினைவேந்தலின் 41வது ஆண்டு

# என்று கிடைக்கும் இதற்கான அனைத்துலக நீதி?

அரசியல் ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்

**முன்னுரை**

**சிறிலங்காவின் *1983*ம் ஆண்டு ஜூலை ஈழத் தமிழின அழிப்பின் நினைவேந்தலின் *41* வது ஆண்டு *23.07.2024*இல் தொடங்குகின்ற நேரத்தில் அன்று முதல் இன்று வரை சிறிலங்காவின் ஈழத்தமிழின இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு நோக்குகளிலோ அல்லது இந்த இனஅழிப்பின் தலைமை நோக் கான ஈழத்தமிழர்களின் பொருளாதார வாழ்வை அழித்து அவர்களின் இறைமையை ஒடுக்கி அவர்களின் நிலத்தைக் கடலை அபகரித்துச் சிங்களமயமாக்கல்என்பதிலோஎந்த சிறுமாற்றம் கூட இல்லாதுள்ளது.**

**அதே நேரத்தில் இந்த *41* ஆண்டுகளிலும் இந்த ஈழத்தமிழின அழிப்புக்கான அனைத்துலக சட்டங்களின் அடிப்படையிலான தண்டனை நீதியோ பரிகார நீதியோ இதுவரை கிடைக்காத நிலையும் தொடர்கிறது.**

**இந்நிலையில் இந்த *1983* ஆடியின அழிப் பின் வரலாறு வளர்ச்சி என்பவற்றைச் சுருக்க மாக மீட்டுருவாக்கம் செய்து இதற்கான அனைத்துலக சட்டங்களின் அடிப்படையிலான தண்டனை நீதியை அல்லது பரிகார நீதியை எவ்வாறு நடைமுறைச் சாத்தியமாக்கலாம் எனச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கு**

### கால் நூற்றாண்டாகத் திட்டமிட்டு வளர்க்கப்பட்ட 1983க்கான இனஅழிப்பு அரசியல்

இற்றைக்கு 80 ஆண்டுகளுக்கு முன், 1944ம் ஆண்டு மே மாதத்தில் இலங்கை சட்டசபையில் ஜே. ஆர். ஜயவர்த்தனா சிங்களத்தை ஆட்சி மொழியாக்கும் சட்ட மூலத்தை முன்மொழிந்தார். இதற்கு வி. நல்லையா அவர்கள் கொண்டு வந்த திருத்தத்தில் தமிழும் சிங்களமும் இலங்கையின் ஆட்சி மொழி யாக அமைய வேண்டும் எனக் கோரினார். இதனை ஜே. ஆர் ஜயவர்த்தான ஏற்றுக் கொள்ள அதற்கு எஸ். டபிள்யூ. ஆர் டி பண்டாரநாயக்கா தானும் அதனை ஏற்பதாகத் தெரிவித்தார். நல்லையா அவர்களின் திருத்தம் 27க்கு 2 என்ற வாக்குகளால் நிறைவேறியது. பண்டாரநாயக்காவால் 1945இல் ஜே. ஆர் ஜயவர்த்தானவைத் தலைமையாகக் கொண்ட ஆணைக்குழுவொன்று ஆங்கிலத்தில் இருந்து சிங்களத்திலும் தமிழிலும் ஆட்சியினை முன்னெடுப்பது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டது. 1946 இல் இந்த ஆணைக்குழு சிங்களத்திலும் தமிழிலும் ஆட்சி இடம்பெற வேண்டுமென்ற அறிக்கையை வெளியிட்டது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியைப் பண்பாட்டு மீட்டுணர்வு மூலம் எதிர்க்கின்ற தேவை இருந்ததினால் 1930 முதல் 1948 வரை சிங்களமும் தமிழும் ஆட்சி மொழிகள் என்ற கருத்தியல் காலனித்துவத்தில் இருந்து விடுதலைக்காக மக்களை ஒருமைப்படுத்தி ஒருங்கிணைப்பதற்குத் தேவையான அரசியல் உத்தியாக இருந்தது.


தொடர்ந்து 1954இல் உயர்கல்விக்கான ஆணைக்குழு முன்னாள் நீதியரசர் ஆர்தர் விஜேவர்த்தனா தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் நியமிக்கப்பட்ட பொழுது அதில் தமிழ் மாணவர்களுக்கு அதிக இடம் உயர்கல்வியில் அளிக்கப்படுகிறது என்ற புள்ளி விபரங்களுடான அறிக்கை பௌத்த சிங்களத் தீவிரவாதச் செயற்பாட்டாளரான எல் எச். மெத்தானந்தாவால் முன்வைக்கப்பட்டுச் சிங்களவர்களுடைய வளர்ச்சிக்கு இது தடையாக உள்ளதென்ற கருத்து எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன் சிங்கள தமிழ் இரு மொழி ஆட்சிமொழிக் கொள்கையும் தவறாதென்ற கருத்தும் தொடக்கப்பட்டது. ஆயினும் அன்றை கவர்னராக இருந்த ஒலிவர் குணதிலகா இரு மொழி ஆட்சி மொழி அரச கொள்கை எனவும் அதனை உரியமுறையிலேயே கேள்விக்குள்ளாக் கலாமெனவும் அறிவித்தார். இதனை அடுத்து சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக வேண்டும். தரப்படுத்தல் வழி தமிழர்களின் உயர்கல்வி அனுமதி குறைக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை கள் சிங்கள பௌத்தத்தின் வளர்ச்சிக்கான முன் நிபந்தனைகளாகச் சிங்கள அரசியலில் முதன்மை பெற்றன.

1956 இல் புத்தரின் 2500 வது பிறந்த நாளை முன்னிட்டு 1954இல் பிக்குகள் சங்கத்தால் வெளியிடப்பட்ட " புத்தத்துக்கு இழைக்கப்பட்ட துரோகம்" நூல் பௌத்த சிங்கள மக்களிடை மதவெறி மொழிவெறி இனவெறி பாய்ச்சும் தன்மையானதாக அமைந்தது. இந்தச் சூழலில்தான் 05.06.1956 இல் சிங்கள சட்டம் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டு ஈழத்தமிழரின் அடிப்படை மனிதஉரிமைகளானமொழியுரிமைதொழிலுரிமை என்பவற்றுக்கான சட்டப்பாதுகாப்பை இல்லா தாக்கியது. அதே வேளையில் இதனை எதிர்த்து













பாராளுமன்றத்துக்கு முன்பாக கால்பேஸ் கடற் கரையில் தமிழ்த் தலைவர்கள் செய்த சத்தியாக் கிரகத்தை ஆயுதபடைபலத்தால் தாக்கி சத்தியாக்கி ரகப் போராட்டத்தை தமிழரின் இரத்தம் பெருகவைத்த போராட்டமாக மாற்றியதும் அல்லாமல் தமிழரின் உயிர் உடல் நாளாந்த வாழ்வுக்கான பாதுகாப்பு இனி இல்லையென்பதை வெளிப்படுத்தி இனங்காணக் கூடிய அச்சத்தை தமிழர்க்கு வாழ்வாக்கும் வகையில் அரச ஆதரவு டன் கல்லோயாக் குடியேற்றத்திட்டத்தில் ஆயுத மயப்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றக்காரர் மூலமாக சட்டப்பாதுகாப்பை பொலிசார் வழங் காத நிலையில் 150 தமிழரை அவர்களுடைய வரலாற்றுத் தாயகத்திலேயே இனப்படுகொலை செய்யச் செய்து இனவழிப்பு சிங்கள அரசியலும் ஆயுதமுனையில் தமிழர் நில அபகரிப்பும் தொடங்கப்பட்டது.

1911 ம் ஆண்டு முதல் வீறு பெற்று வந்த சிங்கள பௌத்த பேரினவாத உணர்வு 1956 தேர்த லில் பண்டாரநாயக்காவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் கொள்கை விளக்கத் திரட்டில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி தமிழுக்கு நியாயமான பயன்பாடு என்று இடம் பெற்றாலும் தேர்தல் மேடைகளில் நியாயமான தமிழ்மொழிப் பயன்பாடு பற்றியே பேசப்படாது தேர்தலில் வெற்றி பெற்றால் 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்படும் எனச் சிங் கள பௌத்த பேரினவாதத்தினைத் தூண்டும் அரசியல் சுலோகமாகப் பேசப்பட்டது. இதனால் வெற்றி பெற்ற பண்டாரநாயக்காவின் சிறிலங்காச் சுதந்திரக் கட்சி உடன் டபிள்யூ தகநாயக்காவைத் தலைவராகக் கொண்ட சிங்கள மொழி முன்னணி, சிங்களத் தொழிற்சங்கத் தலைவரான பிலிப் குணவர்த்தானவின் கட்சியான புரட்சிகர லங்கா சமசமாஜக்கட்சி இணைந்து ஐக்கிய மக்கள் முன்னணிக் கூட்டாட்சி உருவாகியது. இதில் சிங்கள எழுத்தாளராக இணைந்தவர் தான் ஐ. எம். ஆர் ஏ ஈரியக்கொல்லை 12000 பிக்குகளைக் கொண்ட பிக்குகள் ஒற்றுமை முன்னணியும் பண்டாரநாயக்காவின் 24 மணி நேரச் சிங்கள மட்டும் சட்டத்துக்கு பேராதரவு வழங்கினர்.

இதன் வளர்ச்சியாகவே 1957இல் எல்லா வாகனங்களிலும் இலக்கத் தகடு சிங்கள சிறியுடன் அமைய வேண்டுமென்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்கு எதிர்வினையாகத் தமிழ் சிறி யுடன் தமிழர்கள் 1958 ஜனவரி 1ம் திகதி முதல்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# சாவகச்சேரியில் இருந்து
# சமூக விடுதலையை ஆரம்பிக்க வேண்டும்

இன்றைய காலத்தில் அவரைத் தெரியாத ஒருவர் இலங்கையில் இல்லை... ஒரு வைத்தியர் ஒரு சமூக பொறுப்புடன்களை எடுக்க புறப்பட்டதன் விளைவு. நாட்டின் ஜனாதிபதி சுகாதார அமைச்சரை அனுப்பி பிரச்சினையை பார்க்க வைத்துள்ளார்.



தமிழன், ஒரு வைத்தியன் துணிந்து அநீதிகளுக்கும் ஊழல்களுக்கும் எதிராக குரல் கொடுத்தபோதும் இன்று அவரின் குரல்வளை நசுக்கப்படுகின்றது. பகிரங்கமாக கேட்டும் தமிழ் தேசியம் பேசி திரியும் சட்டவாளர்கள் எவரும் அவருக்கு உதவ முன்வரவில்லை. இப்படித்தான் ஒரு பெரும் தலைவன் வா என்று கூப்பிட்டபோது ஓடி ஒழிந்து, வெளிநாடுகளுக்கு அடைக்கலம் தேடி தப்பி ஓடிய அதே கூட்டம் இன்று போலி தேசியம் பேசித் திரிகின்றது. இன்றும் அதே பல்லவி.

யாராவது வந்துதான் குரல் கொடுக்க வேண்டும். நமக்கு கன்டென்ட் தான் முக்கியம். அப்படிதான் பலரின் வாழ்கை. இங்கே சாதாரண அர்ஜுனக்கு எப்படி ஆதர்வு கிடைக்கும்?. சுகாதார அமைச்சர் கூட இங்கு வந்து ஒரு தள வைத்தியசாலையின் பதில் வைத்திய அதிகாரி இவர்தான் என்று கூறுமளவு அர்ஜுனாவின் தாக்கம் அனைத்து சுகாதார துறைக்குள்ளே ஒரு தாக்கம் செலுத்தியுள்ளது..

### ஏன் இவ்வளவு பிரமிப்பு!

தென்னிலங்கை ஊடகங்களில்கூட அர்ச்சுனாவின் தாக்கம் உள்ளது. ஆக எல்லாவற்றையும் மாற்றியமைக்க உங்கள் அனைவருக்கும் அர்ச்சுனாக்கள் தேவைப்படுகிறார்கள். அர்ச்சுனாக்களின் கதை முடிந்த பின் உங்களுடைய கடமைகள் முடிந்து விடுகிறது.


ஏன் ஒவ்வொருவருக்கும் இந்த சமுதாய அக்கறை வருவதில்லை. அநீதி நடக்கும் இடங்களில் கேள்வி கேட்பதில்லை? காரணம் சுயநலம். நீங்கள் மேற்கூறிய அத்தனையையும் அனுபவிக்கவும் வேண்டும். அதேசமயம் சமூக அக்கறை என்று காட்டிக் கொள்ளவும் வேண்டும். ஏன் இந்த மனோநிலை. எதற்காக இந்த சுயநலம்?



மறுபக்கம் அர்ஜுனா அவரது தவறுகளை மறுக்கவில்லை. வைத்தியர்களின் மோசடிகள் அனைத்தையும் உள்ளிருந்தே சேகரித்து ஆவணப்படுத்தி பிரதி எடுத்து ஏனைய ஆதாரங்களையும் துல்லியமாகவும் உள்ளேயிருந்து ஆரம்பித்து அவர்களின் காலரில் பிடித்து இருக்கலாம்.

இப்போது எல்லாரும் ஒன்று சேர்ந்து மறைத்து உசார் ஆகி விட்டார்கள். இரகசியமாக சட்ட ஆலோசனைகளையும் பெற்று சமூக ஊடகத்தை மட்டுமே நம்பி இருக்காமல் முறைப்படி செய்து தப்பிக்க வழிதேடிவிட்டார்கள்.

இதனை நான் கூறுவது கூட அவர் மீதிருக்கும் சுயநலமற்ற அக்கறை காரணமாக. தற்போது பிரச்சினைக்குரிய வைத்தியர்கள் அவர் மீதான வழக்கு தனிப்பட்ட வாழக்கு ஆக்கிவிட்டார்கள். வேறு விடயங்கள் பற்றி அவர் யோசிக்கமுடியாமல் ஆக்கியுள்ளார்கள்.



கேபிட்டல் ஊடகம் போன்ற சிலர் டிரெண்டிங் விளம்பரத்திற்கு அர்ச்சுனாவின் வாயைக் கிளறி பலதையும் பேச வைக்கிறார்கள். இது புரியாமல் அவரும் புலம்புகிறார். இதனால் அவரின் பெறுமதி அவருக்கே புரிவதில்லை. பின்னாளில் இலங்கையின் சுகாதார துறைக்கே செயலாளர் ஆக வர தகுதியுடைய தமிழர். அரைகுறை இல்லை *call me as sir* புகழ் யாழ் மாவட்ட வைத்திய அதிகாரி பிரணவனுக்கே பாடம் எடுத்தவர்.

## அசாந்த் வடிவேல்

ஆங்கிலத்தில் கூறுவார்கள் *wooden spoon* என்று அதைபோல இங்கு ஒரு பிராந்திய சுகாதார அதிகாரி இருக்கிறார், அவரின் ஆளுமை ஆமை போல. அதுவே அனைத்துப் பிரதேச வைத்தியசாலைகளுக்கும் வசதியாக நிர்வாகம் செய்ய முடிகிறது. சுற்றுநிருபம் படி அனைவரும் வேலை செய்தால் புதிதாக வருபவர் ஏன் நிர்வாகம் பற்றி பேச போகிறார்.

ஆனால் அர்ஜுனா சிங்களம், ஆங்கிலம் என மனுஷன் கணணித் தொழில்நுட்பத்தில் கூட அதிக திறன் உள்ளவர். அதைவிட *MBBS,* மேலதிகமாக மருத்துவ நிர்வாகத்துறை படித்து உள்ளார். அடுத்து அவர் வெளிநாட்டில் படிக்க செல்லுவார் அது இனி நடக்குமோ தெரியாது.

*Consultant of surgery* இருந்தால் வெளிநாடு போய் செட்டில் ஆகி இருக்கலாம். இலங்கை மருத்துவ நிர்வாகம் படித்து அங்கு போய் வேலை கேட்டால் சந்தி சிரிக்கும். ஆனால் அவருக்கு பிற மொழி கல்வியை ஒரு வருடம் முடித்தால் அது முடிந்த பின் அவர் எதிர்காலமே வேறு. சபிக்கப்பட்ட தேசத்தில் எதுவுமே செய்யமுடியாது. இப்போது அவர் சேவையில் இல்லை. ஜனாதிபதியை சந்தித்து பேசினால் தீர்வு உண்டு.




கருச்சிதைவு செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட வைத்தியர் ஃஷபியை கூட நீதிமன்றம் விடுவித்துள்ளது. இவர் மீது வழக்குகள் பல. அர்ஜுனா இனி அவர் சேவையில் இருந்தால் அவர் மீது பல கண்கள் குறிவைக்கப்படும். அவரின் குடும்பம் நண்பர்கள் பள்ளித் தோழர்கள் அவருக்கு ஆறுதலாக இருக்க வேண்டும். ஆனாலும் மனிதன் . அனைத்து சுயநல வைத்தியர்களையும் அதிகாரிகளையும் ஓரளவு திருத்தி வேலை பயத்துடன் செய்ய வைத்துள்ளார்.

பலர் திருந்தி விடுவார்கள். உடனே வடக்கில் மருத்துவ மாஃபியா கொஞ்சம் அடங்கியுள்ளது. மக்களுக்கும் பயந்து உள்ளது. உடனடியாக சுகாதார அமைச்சு வைதியர்களுக்கும் பயோமெட்ரிக் வரவுப்பதிவு பொறிமுறையை நடைமுறைபடுத்த வேண்டும். வைதியர்களின் ஒழுங்கான வரவு கண்காணிக்க படவேண்டும். தனியார் வைத்தியசாலைக்கு குறித்த நேரத்திற்கு சரியாக செல்லும் அதே வைத்தியர்கள் அரச வைத்தியசாலைக்கு பிந்தி போனால் கேள்வி கேட்க கூடாது. சேர்க்கு கோவம் வரும்... என்ற வழக்கம் மாறவேண்டும்



தாதியர்கள், நோயாளர் விடுதிக்கு பொறுப்பானவர்கள், மருத்துவத்துறை மாணவர்கள் ஆகியோர் கோப்புக்களை தூக்கிகொண்டு ஆட்டு மந்தைகள்போல பின்னுக்கு ஓடகூடாது. அவர்கள் தமது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை உணரவேண்டும். முதலில் வடக்கில் இதனை உடனே ஆரம்பிக்க வேண்டும். அதை கண்காணிக்க வேண்டும்.

மேலும் பல அக்கறையான வைத்தியர்கள் வெளிநாட்டுக்குச் செல்லக்கூடிய நிர்ப்பந்தத்தில்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# திருகோணமலை மாவட்ட எம்.பியானார் குகதாசன் ஒரு பார்வை

பாகம் 2


குகதாசன் அவர்கள் தமிழகத்தில் உள்ள திருநெல்வேலிப் பல்கலைக்கழகத்தோடு இணைந்து, தமிழ் மொழி BA மற்றும் MA பட்டப் படிப்புகளைக் கனடாவில் நடத்தினார் என்பதனால், இதன்மூலமாக கனடாவில் தமிழ் மொழிப் பட்டதாரிகளும் தமிழ் ஆசிரியர்களும் கனேடிய மண்ணில் உருவாகுவதற்கு முதன்மைக் காரண மானார். இதற்கெல்லாம் மேலாய் கனேடியக் குடிவரவுத் துறையின் குடியமர்வு மற்றும் இசை வாக்கத் திட்டத்தில் வேலை வாய்ப்புப் பிரிவு இணைப்பாளராகப் பதினெட்டு ஆண்டுகள் பணிபுரிந்த குகதாசன் அவர்கள், இந்தக் காலத்தில் இலங்கை மற்றும் தமிழ்நாடு உள்ளிட்ட உலகின் பல பாகங்களில் இருந்து கனடாவுக்கு வரும் பல்லாயிரக்கணக்கான புதிய குடிவரவாளருக்குக் கல்வி, வேலைவாய்ப்பு. குடியமர்வு உள்ளிட்ட புதுவாழ்வு கிடைக்கத் துணை புரிந்தார்.



மேலும் அவர் கனடாவில் வாழ்ந்த காலத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக் களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நிவாரணம், மறுவாழ்வு மற்றும் கல்விப் பணிகளுக்குப் பேருதவி புரிந்துள்ளார் என்பதோடு 2009 ஆம் ஆண்டு காலத்தின் பின்னரான 2013 ஆம் ஆண்டுகாலப்பகுதியில்தமிழ்தேசியகூட்டமைப்பு பிரதிநிதிகளை வெளி நாட்டு தூதுவர்கள் வந்து சந்தித்து செல்ல ஏதுவாக கொழும்பில் தமிழரசு கட்சி அலுவலகத்தை வாடகை வீடொன்றினை எடுத்து பூர்த்திசெய்தார்.

இந்த காலத்தின் பின்னர் கனடா நாட்டுக்கு வருகை தந்த இலங்கை தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா சம்பந்தன் மாவை சேனாதிராஜா மற்றும் சுமந்திரன் அவர்களது வேண்டுகோளினால் குறிப்பாக, தனக்கு பின்னர் திருகோணமலைக்கு நல்ல தலைமைத்துவம் தேவை என்ற ஐயா சம்பந்தனது வற்புறுத்தலினால் குகதாசன் அவர்கள் தனது கனேடிய உரிமைகளை துறந்து, 2018 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நிரந்தரமாக இலங்கை திரும்பினார். இவ்வாறு இலங்கை திரும்பிய குகதாசன் அவர்கள் எங்கள் திருகோணமலை மண்ணில் தேர்தலில் போட்டி யிட்டு வெற்றி ஈட்டவில்லை என்றாலும் இலங்கை யின் அரசுத்தலைவர் மைத்திரி பால சிறிசேனவின் நல்லிணக்க அரசாங்க காலத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் கட்டுப்பாட்டில் இயங்கிய கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி இணைப்பாளராகவும் பணிபுரிந்தார்.

இக்காலத்தில் குகதாசன் அவர்கள் சம்பந்தன் அவர்களது ஆதரவோடு, 2019 ஆம் ஆண்டில் மட்டும் €2217 மில்லியன் ரூபா செலவில் வீடமைப்பு, குளங்கள் திருத்துதல், வீதியமைப்பு, பாடசாலைக் கட்டடங்களை நிறுவுதல் கோவில் திருத்தங்கள், நீர் வழங்கல், மருத்துவமனை மறுசீரமைப்பு, கடற்தொழில் கட்டடங்கள் அமைத் தல், பெண்களுக்கான கைத்தொழில் முயற்சிகளை உருவாக்குதல், இளையோர் தொழில் பயிற்சி, சமூக சேவைக் கட்டடங்கள் அமைத்தல் போன்ற முக்கிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள அயராது உழைத்தார்.



இதனை விட கட்டுக்குளம், குமாரபுரம், ஆகிய இடங்களில் நெசவு சாலைகளை திறக்க வழிவகை செய்தார் என்பதோடு, நூறு தமிழ் இளையோருக்கு பார ஊர்திகள் இயக்குநர் வேலைவாய்ப்பை பெறக்கூடிய பயிற்சிகளை அளித்துள்ளார் என்பது எதிர்கால எம் மண்ணின் வளர்ச்சிக்கு அவர் எடுத்திருக்கும் சிரத்தையை காட்டுகின்றது.

## திருமலையான்

குகதாசன் அவர்கள் 2018 தொடக்கம் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் தலைவராகவும் இருந்து கனேடிய திருகோணமலை நலன்புரிச் சங்கத்தின் உதவியோடு

1. பல்கலைக்கழக அனுமதி பெற்றும் பெற்றோர் இன்மையால் அல்லது பண வசதி இன்மையால் படிப்பை தொடர முடியாத நிலையில் உள்ள திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 64 பல்கலைக்கழக மாணவர் களுக்குக் கல்வியை தொடர மாதந்தோறும் பண உதவி கிடைக்க ஆவன செய்துள்ளார்.

2. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மிகப் பின்தங்கிய ஊர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைத் திருகோணமலை, உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி விடுதிக்குக் கொண்டுவந்து அங்கு, அவர்களின் உணவு, உடை, உறைவிடம், கல்வி, உடற்பயிற்சி மற்றும் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்து கொடுப்பதோடு அவர்களுக்கு அறிவியல், தொழில்நுட்பம், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களிலும் சிறப்புக் கவனம் செலுத்தி கல்வியைப்புகட்டி இந்த மாணவர்களை பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி வைத்து, அவர்களைத் துறைசார் வல்லுநர்களாக உருவாக்கி, அவரவர்களது ஊர்களுக்கு திருப்பி அனுப்பி, அவ்வூர்களை மேம்படுத்தும் கனவோடு இந்த சிறப்புக் கல்வித் திட்டதைச் செயற்படுத்தி வருகின்றார்

3. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வெருகல், சேருவில, மொறவெவ மற்றும் குச்சவெளிக் கோட்டங்களிலுள்ள பின்தங்கிய தமிழ் ஊர்களில் உள்ள பல பாடசாலைகளில் கணினி, கணிதம், அறிவியல் மற்றும் ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர் இல்லாத சூழல் நிலவுகின்றது என்பதன் காரணமாக அந்த மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகக் கல்வித் துறையின் வேண்டுகோளுக்கு அமைய மேற்படி பாடசாலைகளுக்கு தொண்டர் ஆசிரியர்களை நியமித்து அந்த ஆசிரியர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கி வரும் திட்டத்தையும் செயற்படுத்தி வருகின்றார்.

4. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஐம்பது பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி பயிலும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவரது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு அண்ணளவாக ஆயிரம் மாணவர்களுக்கு ஞானோதயம் என்னும் புலமைப் பரிசில் தேர்வு வழிகாட்டி என்ற நூலை, 2021 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை ஆண்டுதோறும் வழங்கி வரும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றார். இதன்மூலம் புலமைப் பரிசில் பெறுபேறுகள் மேம்பட்டு செல்வதை கண்கூடாகக் காணக் கூடியதாக உள்ளது.

5. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருமானம் தரும் தொழில் முயற்சிகளாக கைத்தொழில், கமத் தொழில் ,கால்நடை வளர்ப்பு ஆகிய துறைகளை உருவாக்கிக் கொடுத்து வருகின்றார். இந்தத் திட்டத்தின் மூலமாக சில நூறு பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளன.

6. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள எல்லைக் கிராமங்களில் வாழும் மக்களது குடிநீர் சிக்கலைத் தீர்க்கும் நோக்கத்தோடும், வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டாகவும் தோட்டக் கிணறுகளையும் குழாய்க் கிணறு களையும் சிட்னி முருகன் கோவில் மற்றும் அவுஸ்ரேலியத் தமிழ்ப் பொறியாளர் சங்கத்தின் நிதி உதவியோடு திரு குகதாசன் அமைத்துக் கொடுத்து இருக்கின்றார். இதன் காரணமாக குடிநீர் சிக்கலுக்குத் தீர்வு காண்பதோடு இந்த நீரைப் பயன்படுத்தி வீட்டுத் தோட்டம் செய்து வருவாயைப் பெருக்கவும் வழி ஏற்படுகிறது



7. கொரோனா காலத்தில் திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்களுக்கு ஏறத்தாழ இருபது மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான நிவாரணம் பெற்றுக் கொடுத்த குகதாசன் அந்த கொரோனா காலத்தில் மட்டுமன்றி அதன் பிறகும் அதற்கு முன்னரான காலங்களிலும் வெள்ளம், வறட்சி, புயல் முதலிய இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பாதிக்கப்படும் திருகோணமலை மாவட்ட மக்களுக்கு இன்னும் பல மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான நிவாரண உதவிகள் கிடைக்க ஆவன செய்து வருகின்றார் என்பதோடு 2018 ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவராக இருக்கும் குகதாசன் அவர்கள், 1975 ஆம் ஆண்டு முதல் தமிழரசு கட்சியின் உறுப்பினராக இருந்து வருகின்றார். அத்தோடு 1976 முதல் 1984 வரை தமிழரசுக் கட்சியின் திரியாய் மூலக்கிளைத்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# கிள்ளிக் கொடுக்கவும் விரும்பாத இனவாதம்

இலங்கையில் மலையக மக்களின் பின்தங்கிய நிலைமைகள் தொடர்பில் வலியுறுத்தல்கள் பலவும் இருந்து வருகின்றன. இதனிடையே அண்மையில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கும் இது தொடர்பில் தனது கரிசனையை வெளிப்படுத்தி இருக்கின்றார். மலையக மக்கள் இலங்கையில் மிகவும் பின் தங்கிய பிரிவினராக இருப்பதை தாம் ஏற்றுக் கொள்வதாகவும், மலையக மக்களுக்கு மேலும் உதவிடும் சந்தர்ப்பங்களை எதிர்நோக்க அமெரிக்க அரசு விரும்புவதாகவும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதிநிதிகளிடம் அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார். மேலும் இதன்போது மலையக மக்களுக்கென்று விசேட ஒதுக்கீட்டு திட்டங்கள் அவசியமென்பதையும் தூதுவர் ஆழமாக வலியுறுத்தியுள்ளமை குறிப் பிடத்தக்கதாகும்.



மலையக மக்கள் இந்நாட்டில் 200 வருடகால வரலாற்றினைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். 200 என்பது வெறும் வார்த்தையல்ல. அதற்குப் பின்னால் பல்லாயிரக் கணக்கான தமிழ் உறவுகளின் வலிகளும் உயிர்த் தியாகங்களும் இரண்டறக் கலந்து இந்த மண்ணுக்கு உரமாய் அமைந்திருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான உயிர்த் தியாகங்களின் சமாதியில்தான் மலையகம் என்னும் தமிழ்த் தேசிய இனம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. மலையக சமூகமென்பது வாழமுடியாத, அடையாளமற்ற இனமல்ல.

மாறாக நீண்ட வரலாற்றினைக் கொண்ட தனித்துவமான தமிழினம் என்று புத்திஜீவிகள் மலையக மக்களை பெருமைப்படுத்துகின்றனர். இலங்கையில் மலையக மக்கள் 200 வருடம் என்பது ஒரு சிறப்பம்சமே எனினும் இவர்களின் வரலாற்றுக்கும் வாழ்க்கை அபிவிருத்திக்கும் இடையில் விரிசல் நிலை அதிகரித்துக் காணப்படுவதையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இம்மக்களின் வரலாற்றுக்கேற்ப வாழ்க்கையில் அபிவிருத்தி ஏற்படவில்லை என்பது கசப்பான உண்மையாகும். அடிப்படை தேவைகள் கூட பூர்த்தி செய்யப்படாத நிலையில் வாழும் இம்மக்கள் இன்னும் நாட்கூலிகளாக வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருப்பது வேதனைக்குரிய ஒரு விடயமாகும்.

### இனவாத சிந்தனை

இம்மக்களின் கல்வி, தொழில்வாய்ப்பு, பொருளாதாரம், சமூக நிலைமைகள், அரசியல் போன்ற பல துறைகளிலும் அபிவிருத்தியை ஏற்படுத்த மலையக அரசியல்வாதிகள் மற்றும் நலன்விரும்பிகள் முனைந்து வருகின்றபோதும் அது அவ்வளவு இலகுவாக சாத்தியப்படுவதாக இல்லை. 'சாண் ஏறினால் முழம் சறுக்கும்' நிலைமைகளே இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. நாட்டின் ஆட்சியாளர்கள் இம்மக்களின் நலன்கருதி வழங்கும் ஒரு சில சலுகைகளைக்கூட இனவாதிகள் இனவாத கண்ணோட்டத்திலேயே நோக்கி வருகின்றனர்.

மலையக மக்கள் எவ்வித நன்மைகளையும்



பெற்று விடக்கூடாது என்பதில் குறியாக உள்ள இவர்கள் இச்சமூகத்தை சகல துறைகளிலும் நிர்வாணப்படுத்துவதையே தமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு செயற்படுகின்றனர். 'ஆட்சியாளர்கள் அள்ளிக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. கிள்ளிக் கொடுப்பதற்கும்' இனவாதிகள் விடுவதாக இல்லை.

## துரைசாமி நடராஜா

மலையக மக்கள் இந்நாட்டின் முதுகெலும்பாக இருந்து நாட்டின் தேசிய வருவாயில் காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருகின்ற நிலையில் இம்மக்களை தனித்தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும். வீட்டுரிமை மற்றும் காணியுரிமை மிக்க சமூகமாக அவர்களை மாற்றியமைக்க வேண்டும் என்றெல்லாம் கோஷங்கள் வலுப்பெற்று வருகின்றன.



இதனிடையே மலையக மக்களை தொடர்ந்தும் மலையகத் தமிழர்களாகவோ அல்லது தோட்டப்புற மக்களாகவோ வாழ வைப்பதற்குப் பதிலாக இலங்கை சமூகத்தில் ஏனைய மக்களுடன் ஒன்றிணைப்பதே தமது எதிர்பார்ப்பாகும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதற்காக இரண்டு நூற்றாண்டுகளாக உழைத்து வரும் மலையகத் தமிழ் மக்களை தொடர்ந்தும் தனியான இனக்குழுவாக அன்றி தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கான பணி மிகவும் சவால் நிறைந்தது. ஆனாலும் துரித வேலைத்திட்டமொன்று அவசியம் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

மலையக மக்களின் பின்தங்கிய வெளிப்பாடுகள் குறித்து தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பலவும் சுட்டிக்காட்டியுள்ளன. இம்மக்களின் கல்வி, இருப்பிடம், பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான பின்னடைவுகளுக்கு பல்வேறு காரணிகள் வலுசேர்த்துள்ளன. 1948 ம் ஆண்டில் இந்திய வம்சாவளி மக்களின் பிரசாவுரிமை மற்றும் வாக்குரிமை என்பன பறிக்கப்பட்டு அவர்கள் அரசியலில் அநாதையாக்கப்பட்ட நிலைமையானது இம்மக்களின் வரலாற்றில் ஒரு கறைபடிந்த அத்தியாயமேயாகும் என்பதை மறுப்பதற்கில்லை.



இந்நிலைமையும் இம்மக்களின் பின்னடைவுக்கு மிக முக்கிய காரணமாக அமைந்ததெனலாம். இதனால் ஏற்பட்ட தழும்புகள் இன்று வரைக்கும் நின்று நிலைக்கின்றன என்றால் மிகையாகாது. ஏனைய சமூகங்களுக்கும் மலையக சமூகத்திற்கும் இடையில் பாரிய விரிசல் நிலை மேலோங்குவதற்கும் இது உந்துசக்தியாக அமைந்தது.

### இனப்படுகொலைக்கு ஈடு

ஏற்கனவே டொனமூர் ஆணைக்குழு இந்திய வம்சாவளி மக்களுக்கு வாக்குரிமை வழங்க முற்பட்டபோது கண்டனக் குரல்கள் பலவும் மேலோங்கின. 1928 இல் பெண்களுக்கும், இந்தியத் தொழிலாளர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை பற்றிய பிரச்சினை மிகுந்த வாதப் பிரதிவாதங்களுக்கு வித்திட்டிருந்தது. டொனமூர் ஆணைக்குழுவினுடைய சிபாரிசில் அபாய அறிவித்தலாக அமைந்தது இந்தியத் தொழிலாளருக்கு வாக்குரிமையளிக்கும் பிரேரணையாகும். இந்தியாவைப் பொறுத்த வரையில் சிங்களவர் சிறுபான்மையினர் மாத்திரமின்றி அநீதிக்கு பலியாவர் என்று டீ.எஸ்.சேனநாயக்கா தெரிவித்திருந்தார்.



'கொழும்பில் வசிக்கும் இந்தியரை விட தோட்டத்து கூலிக்கு நான் மிகவும் அஞ்சுகிறேன். இந்தியத் தொழிலாளி காலையில் 6 மணிக்கு வேலைக்குப் போய் மாலை 6 மணிக்கு தனது கூலி லயன்களுக்கு திரும்புகின்றான். இத்தீவில் நிகழ்வின் பற்றி அவனுக்கு என்ன தெரியும்?.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# கல்வி, தாய்மொழி, தேசு விடுதலை

## (ஃபின்லாந்து வரலாற்றுப் பின்னணி)

பாகம் 5

ஐரோப்பிய நாடுகளில் கல்வி, பயிற்சிகள், அறிவுசார் நிகழ்வுகள் அனைத்தும் மதச் சார்புடையவையாகவே இருந்து வந்தன. ஏனைய கிறிஸ்தவ ஐரோப்பிய நாடுகளைப் போல, சுவீடனிலும் ஃபின்லாந்திலும் கி.பி 12ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 1850 வரை, கல்விச் செயற்பாடுகளின் கட்டுப்பாடு தேவாலயங்களிடம் இருந்தது. 13ஆம் நூற்றாண்டில்தான் ஃபின்லாந்தின் முதல்முதலாக முறைப்படுத்தப்பட்டப் பள்ளியை கிருத்துவ துறவிகளின் தலைமையில் துருக்கு (Turku) நகரில் திருஅவை ஏற்படுத்தியது.

*(https://eurydice.eacea.ec.europa.eu/national-education-systems/finland/historical-development)*

15ஆம் நூற்றாண்டுக் காலகட்டத்தில், ஐரோப்பிய நாட்டின் லூதுர் காலத்தில் (Lutheranism) பைபிளை வாசிப்பதற்கான கல்வி அறிவு எல்லா குடிமகன்களுக்கும் கட்டாயமாக்கினர். தேவாலயங்களில் திருமணம் செய்வதற்கான அடிப்படைத் தகுதியாக கற்றல் அறிவுச் சான்றிதழை முன்னிறுத்தியிருந்தார்கள். ஃபின்லாந்தும் அனைவருக்குமான கல்வியை இந்த பின்னணியில் இருந்தே தொடங்கிற்று.



பேராயர் மைக்கேல் அகிரிகோல (Mikael Agricola), மார்டின் லூதர் அவர்களிடம் கற்றவர், பிற்காலத்தில் பைபிளினை ஃபின்னிஷ் மொழியில் கி.பி. 1548இல் கொண்டு வந்தார். அன்றையக் காலக்கட்டத்தில், சமூக மொழியாக ஃபின்னிஷ் தொடர்ந்திருந்தாலும், ஃபின்னிஷ் மொழிப் பேசுவது இரண்டாந்தரமாகவேப் பார்க்கப்பட்டது. நிர் வாக மொழி சுவீடிஷ், பேராலய மொழி இலத்தீனுமாக இருந்து வந்தன.

பேச்சு வழக்கிலும், கதைச் சொல்லாடல்களில் மட்டுமே இருந்த ஃபின்லாந்து நாட்டின் ஃபின்னிஷ் மொழிக்கு, மைக்கேல் அகிரிகோலவின் படைப்பின் வழி, மொழிப் பயன்பாடு பெருகியது எனலாம்.

ஆனாலும், கிட்டத்தட்ட 600 ஆண்டுகளாக சுவீடன் நாட்டின் ஆதிக்கத்தில் ஃபின்லாந்தின் பெரும்பகுதிகள் இருந்ததால், தொடக்கக்கல்விக்கு சுவீடிஷ் மொழியிலேயே தொடர்ந்தும் கடைப்பிடித்தனர், அதேவேளை, பல்கலைக்கழக உயர்கல்விப் பாடங்கள் கிரேக்கம், லத்தீனத்தின் பின்னணியிலும் கற்றுக்கொடுக்கப்பட்டது.

### 17ஆம் நூற்றாண்டு கல்வித்துறை மாற்றங்கள்:

குழந்தைகளின் திறனை சோதனைச் செய்யும் தேர்வினை (Kinketir) 17ஆம் நூற்றாண்டிலிருந்து மதபோதகர்கள்/ஆயர்கள்/பாதிரியார்கள் வசம் இருந்தன.

ஆட்சிப் பகுதியினை நிர்வகித்தல் மற்றும் ஆட்சி மன்றத்தை வழிநடத்துதல் ஆகியவற்றோடு, கல்வித்துறையின் பொறுப்பும் தேவாலயங்களிடம் இருந்ததால், நகர்ப்புற, கிராமப்புற கல்விச்சூழல் மாறுபட்ட நிலையிலும் பல்வேறு ஏற்றத் தாழ்வுகள் நிரம்பியதாகவும் இருந்து வந்துள்ளது.



முனைவர் விஜய் அசோகன்,
கல்வியாளர்

குழந்தைகளுக்கான கற்றல்திறன், குறிப்பாக, வாசிப்புத்திறனை உருவாக்குவதில் பெற்றோர்களுக்குத்தான் பொறுப்பு உண்டு என்ற விதிகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததும் பெரும் சிக்கலாக பிற்காலத்தில் பார்க்கப்பட்டன.



17ஆம் நூற்றாண்டில் இருந்து, கிருத்துவப் பேராலயங்களை நிர்வகிக்கும் அதிகாரிகளும் (Sacristans) மற்றும் ஆசிரியர்களும் கிராமந்தோறும் குழந்தைகளின் கற்றல் திறன் வளர்ப்பிற்காக நியமிக்கப்பட்டனர். எழுத்து, வாசிப்பு, கணக்கிடுதல் மற்றும் கிருத்துவப் பாடல் பாடவும் கிருத்துவத்தின் அடிப்படைக் குறித்தானப் புரிதல்களை ஏற்படுத்தும் கற்றல்நிலைகளைக் கொண்ட பாடத்திட்டம் வகுக்கப்பட்டது. இத்தகைய நடைபாதைப் பள்ளிகள் (Ambulatory Schools) நிர்வாகத்தைக் கவனிக்க, சபைகள் (Congregation) இயங்கின.

இத்தகைய மாற்றங்களால், 18ஆம் நூற்றாண்டில் 50% கல்வியறிவும் 19ஆம் நூற்றாண்டில் 80-90% கல்வியறிவு பெற்றவர்களாக ஃபின்னீஷ் சமூகம் மாற்றமடைந்தது.

### கல்வி மொழியும் விடுதலை உணர்வும்:

1809 வரை, கிட்டத்தட்ட சுவீடிஷ் ஆக்கிரமிப்பில் இருந்த ஃபின்லாந்து, ருசியப் படையால் மீட்கப்பட்டப் பின்னர், ருசியாவின் சைண்ட் பீட்டர்ஸ்பர்கில் (St. Petersburg) ருசிய அரசில் ஃபின்னிஷ் அமைச்சகம் உருவாக்கப்பட்டு,



அங்கிருந்து ஆட்சி நிர்வாகம் கவனிக்கப்பட்டது. ருசியாவின் ஆக்கிரமிப்பினால், ஃபின்லாந்து கல்வித்துறை, ருசியாவின் கல்வித்துறைக் கோட்பாட்டின்படி இயங்கத் தொடங்கின. கல்வி மொழியும் சுவீடிஷ் மொழியில் இருந்து ருசிய மொழிக்கு மாற்றமடைந்தது. அதேவேளை, அரசியல் அதிகாரச்சபை, சமூக அமைப்புகள் தொடர்பாக ஃபின்லாந்தின் நிர்வாக அலகு சுவீடிஷ் தன்மையில் நீண்டகாலத்திற்கு பெரிய மாறுபாடுகள் இல்லாமல் இருந்துள்ளது, அதன்பின், சுவீடிஷ் கட்டுப்பாட்டில் இருந்த ஃபின்லாந்தை விட, ருசியாவின் ஆக்கிரமிப்பில் இருந்த ஃபின்லாந்தின் தன்னாட்சி உரிமையில் பெரிய மாறுதல்கள் இருந்தன.

1809இல் தான் ஆட்சி மன்றக்குழுக்கள் (Governing body) உருவாக்கப்பட்டன. அதன் பின்பு, ஃபின்னிஷ் தேசிய மறுமலர்ச்சிக்கு குரல் கொடுத்தவர்களில் ஒருவரான ஸ்னெல்மென் (Snellman) படித்தவர்கள் மத்தியில் ஃபின்னிஷ் மொழிப் பேச்சுவழக்கத்தை உருவாக்கப் போராடினார், சமூக மொழியாக மட்டுமில்லாமல், கல்வி மொழியாக ஃபின்னிஷ் இருக்க வேண்டும் என்ற குரல்களும் எழத் தொடங்கின.

இந்த காலக்கட்டத்தில் தான், குறிப்பாக 1812 இல் அன்றைய ஃபின்லாந்தின் தலைநகரம் துருக்கு (Turku) வில் இருந்து இன்றைய தலைநகரான ஏல்சிங்கிக்கு (Helsinki) மாற்றப்பட்டது. ஃபின்லாந்து ருசியாவின் ஆக்கிரமிப்பில் இருந்த அதே காலக்கட்டங்களில்தான், ஃபின்னிஷ் தேசிய மறுமலர்ச்சியும் ஃபின்னிஷ் மொழிக்கான உரிமைக்குரல் வலுவாக எழத்தொடங்கியிருந்தன.



ஃபின்னிஷ் தேசிய உணர்வெழுச்சிப் போராட்டக் காலங்களில் ஒலிக்கப்பட்டப் பாடல்களில் ஒன்று, “நாங்கள் சுவீடிஷ் இல்லை, ருசியர்களாக மாற முடியாது, ஆகவே நாங்கள் ஃபின்னிஷ் ஆக மட்டுமே இருக்க முடியும்”

*“Swedes we are no more, Russians we cannot become, therefore Finns we must be.”*

அலுவல் மொழி, தாய்மொழிக் கல்விக்கும், தேசிய இறையாண்மை உணர்விற்கும் உலக வரலாற்றில் எப்பொழுதும் பெருந்தொடர்பு இருக்கும். ஃபின்லாந்து வரலாற்றிலும், சுவீடிஷ் ஆக்கிரமிப்பும் ருசிய ஆக்கிரமிப்பும் கற்றுத் தந்தப் படிப்பினையின் பின்னர், மொழியையும் தனித்த பண்பாட்டையும் காக்க வேண்டிய சூழலுக்கு நகர்ந்திருக்கிறார்கள்.

1858இல் ஃபின்னிஷ் மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்ட முதல் பள்ளி நிறுவப்பட்டது. ஃபின்லாந்திற்கான தனித்த இராணுவம், நாணயம், மற்றும் ஃபின்னிஷ் ஆட்சி மொழிக்கான அங்கீகாரம் என அனைத்தும் உருவாகின. கி.பி. 1863இல் ஃபின் னிஷ் மொழி, அந்நாட்டின் அலுவல் மொழியாக சட்டமியற்றப்பட்டதுதான் ஃபின்லாந்து கல்வித்துறையில் நடந்த மிக முக்கியமான மாற்றங்களில் ஒன்று. அதன் பின்னரே, படிப் படியாக, சுவீடிஷ்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# சுயேச்சை வேட்பாளர்களின் வெற்றி, தொழிற்கட்சி அரசுக்குச் சொல்லும் செய்தி என்ன?

ஐக்கிய இராச்சியத்தில் தற்போது நடந்து முடிந்திருக்கின்ற பொதுத்தேர்தலில், ஸ்ராமரின் தொழிற்கட்சி, 1997ம் ஆண்டு, புதிய தொழிற்கட்சி என்ற பெயரில், ரோணி பிளேயர் ஈட்டிய வெற்றியைப் போன்று, அதிக ஆசனத்தைப் பெற்று வெற்றியைப் பெற்றிருக்கிறது.




அதற்கு முதல் நாள், கீயர் ஸ்ராமரின் (Keir Starmer) தொழிற்கட்சி, ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், 1997ம் ஆண்டு, புதிய தொழிற்கட்சி என்ற பெயரில் ரோணி பிளேயர் (Tony Blair) ஈட்டிய வெற்றியைப் போன்று, அதிக ஆசனத்தைப் பெற்று வெற்றியை ஈட்டியிருந்தது.

பதின்நான்கு வருடக் காத்திருப்புக்குப் பின்னர், பழமைவாதக் கட்சியின் மோசமான ஆட்சிக்குப் பின்னர், தொழிற்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறது. ஆனால் இங்கு, இவற்றையெல்லாவற்றையும் விட முக்கியமான ஒரு விடயம் உற்றுநோக்கப்படவேண்டியிருக்கிது.

உண்மையில் தொழிற்கட்சி பெற்ற இந்த அமோக வெற்றி, ஸ்ராமரின் கொள்கைகளை மக்கள் ஏற்றுக்கொண்டதனால் தான் என்று சொல்ல முடியாது. ஆனால் ரோறி (Tory) என்று அழைக்கப்படுகின்ற பழமைவாதக்கட்சியை மக்கள் முற்றுமுழுதாக நிராகரித்ததே இதற்கான முழுமுதற்காரணம் ஆகும்.




நேற்று இரவு, பழமைவாதக் கட்சியினர் துடைத்தழிக்கப்பட்டார்கள். பழமைவாதக் கட்சிக்கு வாக்குச் செலுத்த மக்கள் விரும்பவில்லை. பழமைவாதக் கட்சியின் கோட்டை எனக் கருதப்பட்ட தொகுதிகளில் கூட, முன்னாள் பிரதம மந்திரிகளான திரேசா மே, போறிஸ் ஜோண்சன், டேவிட் கமறொன், மற்றும் பிரித்தானிய வரலாற்றில் மிகக் குறுகிய காலம் பிரதமராகப் பணியாற்றிய லிஸ் ற்றஸ்ற் ஆகியோரின் தொகுதிகளில் கூட அவர்கள் தோல்வியைத் தழுவியிருக்கிறார்கள்.

மிகவும் அதிர்ச்சியளிக்கக்கூடிய வகையில், பழமைவாதக் கட்சியினர், தங்களது 250 ஆசனங்களை இழந்திருக்கிறார்கள். பழமைவாதக் கட்சியின் முன்னணி ஆளுமைகளான, ஜேக்கப் றீஸ் மொக், பெனி மோடோண்ட், கிராண்ட் ஷப்ஸ் ஆகியோர் கூட தமது ஆசனங்களை இழந்திருக்கிறார்கள். முன்னெப்போதும் இல்லாதவாறு ரோறிக் கட்சியின் அமைச்சரவையைச் சேர்ந்த, 11 முன்னாள் அமைச்சர்கள் தமது பாராளுமன்ற ஆசனங்களைக் கோட்டைவிட்டிருக்கிறார்கள். பழமைவாதக் கட்சி முற்றாகத் துடைத்தழிக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரம், தொழிற்கட்சி அமோக வெற்றியை ஈட்டியிருக்கிறது. ஆனால் அவர்களுக்கு வாக்குச் செலுத்திய வாக்காளர்களில், மூன்றில் ஒரு வீதமானோர் மட்டுமே, அதாவது 35 வீதமானோர் மட்டுமே தொழிற்கட்சிக்கு என்று தமது வாக்குகளை அளித்திருக்கிறார்கள். இந்தத் தேர்தலில் தொழிற்கட்சி பெற்ற வாக்குகள் 1.4 வீதத்தால் மட்டுமே அதிகரித்திருக்கிறது. இது பெருமளவில் ஸ்கொட்லாந்தில் எஸ்என்பி (SNP) கட்சிக்கு எதிராக அளிக்கப்பட்ட வாக்குகள் ஆகும். 2017ம் ஆண்டில் ஜெறெமி கோபினின் (Jeremy Corbin) தலைமையில், தொழிற்கட்சி பெற்ற வாக்குடன் ஒப்பிடும் போது, இது 5 சதவீதம் குறைவானதாகும்.




2017 மற்றும் 2019ம் ஆண்டுகளில், பழமைவாதக் கட்சியை பிரித்தானிய மக்கள் நிராகரித்தது போல, மீண்டும் ஒரு தடவை அந்தக் கட்சியை மக்கள் நிராகரித்திருக்கிறார்கள் என்றால், கோர்பின் தலைமையிலான தொழிற்கட்சியும் இவ்வாறான ஒரு வெற்றியை நிச்சயமாகப் பெற்றிருக்கும்.

பிரிட்டன் காலாதிகாலமாகப் பின்பற்றி வருகின்ற தேர்தல் நடைமுறையே இதற்கான காரணம் ஆகும். இங்கே வாக்காளர்கள் ஒரேயொரு வேட்பாளருக்கு மட்டுமே வாக்களிப்பார்கள். எந்த வேட்பாளர் அதிகமான வாக்குகளைப் பெறுகின்றாரோ அந்த வேட்பாளர் வெற்றியைத் தனதாக்கிக் கொள்வார். இந்த அணுகுமுறையால் தான் இரண்டு கட்சி ஆட்சி பிரிட்டனில் தக்கவைக்கப்படுகிறது. இது உண்மையில் மக்களது விருப்புக்கு முரணானதாகும்.

இவ்வாறான ஒரு பிரச்சினையான தேர்தல் நடைமுறையில் கூட, சுயேச்சை வேட்பாளர்களைத் தெரிவுசெய்ததன் மூலம் தொழிற்கட்சிக்கு அவர்கள் ஒரு தெளிவான செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தத்தேர்தலில், ஸ்ராமர்தலைமையிலான தொழிற்கட்சி, முன்னர் தங்கள் கோட்டைகளாக விளங்கிய பல தொகுதிகளில், சுயேச்சை வேட்பாளரிடம் தோல்வியடைந்திருக்கிறது. காஸாவில் நிபந்தனையற்ற போர்நிறுத்தம் உடனடியாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றும், பல பத்து ஆண்டுகளாக பாலஸ்தீனத்தில் தொடரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்

தமிழில்: ஜெயந்திரன்

நிறுத்தப்பட வேண்டும் என்று கோரி, பாலஸ்தீன ஆதரவுத்தளத்தில் நின்றுகொண்டு, இந்த சுயேச்சை வேட்பாளர்கள் தேர்தலை எதிர்கொண்டிருந்தார்கள். 5 தொகுதிகளில் வாக்காளர்கள், காஸாவில் நடைபெற்றுவரும் யுத்தம் தொடர்பான ஸ்ராமரின் இஸ்ரேல் ஆதரவுக் கொள்கையைப் புறந்தள்ளி, மேற்குறிப்பிடப்பட்ட பாலஸ்தீன மக்களின் பிரச்சினைக்கு ஆதரவாக போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர்களைத் தெரிவுசெய்திருக்கிறார்கள். பதவியிலிருந்து இறக்கப்பட்ட முன்னாள் தொழிற்கட்சித் தலைவரான ஜெறெமி கோர்பின், வடக்கு இஸ்லிங்ரன் தேர்தல் தொகுதியில் பாலஸ்தீனச் சார்பு சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு, இலகுவாக வெற்றியடைந்திருக்கிறார்.

தொழிற்கட்சி வேட்பாளருக்குப் பாதுகாப்பான தொகுதிகள் எனக்கருதப்பட்ட பல தொகுதிகளில், போட்டியிட்ட பாலஸ்தீன சார்பு சுயேச்சை வேட்பாளர்கள், தொழிற்கட்சி வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளின் பெரும்பான்மையை கணிசமான அளவு குறைத்திருக்கிறார்கள். இல்போட் (Ilford) தொகுதியில், தொழிற்கட்சியின் நிழல் சுகாதாரச் செயலரான, வெஸ் ஸ்றீற்றிங்கின் 5000 வாக்குகள் பெரும்பான்மையை வெறும், 500 வாக்காகக் குறைத்திருப்பவர், 23 வயதேயான பிரித்தானிய-பாலஸ்தீனப் பெண்மணி லெயான் மொஹமத் ஆவார். உண்மையில் இங்கே தொழிற்கட்சி வேட்பாளர் அரும்பொட்டில் வெற்றிபெற்றிருக்கிறார். அதே போலவே, பேர்மிங்காம் யாட்லி தொகுதியில் முன்னர் 10,000 வாக்குகள் பெரும்பான்மையைக் கொண்டிருந்த தொழிற்கட்சி வேட்பாளரான ஜெஸ் பிலிப்ஸின் பெரும்பான்மை, பாலஸ்தீன சார்புக் கொள்கையைக் கொண்டிருக்கும் சிறிய கட்சியின் சுயேச்சை வேட்பாளரால் சில நூறு வாக்குகளாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.



முன்னெப்போதும் இல்லாதவாறு சுயேச்சை வேட்பாளர்கள் பெற்ற வெற்றி, முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தொகுதிகளில், காஸா தொடர்பாக ஸ்ராமரின் கொள்கைக்குக் கிடைத்த எதிர்ப்பு என்றே பிரிட்டனின் முக்கிய ஊடகங்கள் விளக்கம் கொடுத்துள்ளன. காஸாவில் மேற்கொள்ளப்படும் இனப்படுகொலையை, முஸ்லீம் மக்கள் மட்டுமே எதிர்க்கிறார்கள் என்ற தவறான புரிதலை இது பிரதிபலிக்கிறது. இவ்வாறான கருத்தை வெளியிடுபவர்கள் முஸ்லீம் மக்களிடையே

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

**1983 ஈழத்தமி... தொடர்ச்சி ...**

தாங்கள் வாகனம் ஓடியதை எதிர்த்து சிங்களப் பகுதிகளில் இருந்த தமிழ்ப் பெயர்ப்பலகைகளை எல்லாம் பிக்குகள் தலைமையில் கறுப்புத்தார் பூசி அழித்து அதன் தொடர்ச்சியாக 25.05.1958 இல் தமிழரசுக்கட்சியின் வவுனியா மாநாட்டில் இருந்து மட்டக்களப்புக்குத் தமிழ்ப்பயணிகள் பயணித்த புகையிரதத்தைப் பொல்லநறுவையில் வைத்து திட்டமிட்ட முறையில் சிங்களவர்கள் கவிழ்த்து தமிழர்களைத் தாக்கிச் சொத்துக்களைக் கொள்ளையடித்து 1958 ஈழத்தமிழின அழிப்பைத் தொடங்கினர்.

களுவாஞ்சிக்குடியில் அன்றையத் தினம் தனிப்பட்ட முரண்பாட்டில் களுவாஞ்சிக்குடியில் கொல்லப்பட்ட நுவரெலியாவின் முன்னாள் மேயர் சேனரத்னாவின் மரணத்தைத் தமிழர்கள் சிங்களவர்களைக் கொல்கின்றார்கள் எனப் பல முறை சிங்கள வானலைகளில் செய்தியாக்கி தமிழர் தாயகத்துக்கு வெளியே வாழ்ந்த தமிழர்களைக் குறிப்பாகக் கொழும்பில் வாழ்ந்தவர்களை நூற்றுக்கணக்கில் கொன்றழித்தனர். கடைகள் வீடுகளை எரித்தனர். பாணந்துறை கந்தசுவாமி சைவஆயலக் குருக்களைக் கொழுத்தி எரித்தனர். கதிர்காமத்தில் இருந்த தமிழ் அடியார்களைக் குத்திக் கொன்றனர். கர்ப்பிணித் தமிழ்ப்பெண்களை வயிற்றைக் கிழித்துக் கொன்றனர். இவ்வாறாக 1956 ஐ விட ஒழுங்கமைக்கப்பட்ட ஈழத்தமிழின அழிப்பாக 1958 ஈழத்தமிழின அழிப்பைச் சிங்கள அரசாங்கம் முன்னெடுத்தது. இதன் பின்னர் 1970 முதல் அரசியல் விழிப்புணர்ச்சியுற்ற ஈழத்தமிழர்களை அவர்களது தாயகத்திலேயே காரணமின்றிக் கைது செய்து விசாரணையின்றிச் சிறையில் காலவரையின்றி அடைத்தல் பொலிசாரை இராணுவமாகப் பயன்படுத்திக் கைதுசெய்து கொன்று பொதுவிடங்களில் எறிந்து மக்களை அச்சப்படுத்தல் போன்ற சட்டவிரோத மனிதாயமற்ற செயல்களைச் சுதந்திரக் கட்சி இடதுசாரி கூட்டணி ஆட்சி செய்தது. உதாரணமாக இன்பம் என்னும் யாழ்ப்பாண இளைஞரும் அவரின் மைத்துனரும் இவ்வாறு இரவு பொலிசாரால் கைதாக்கப்பட்டு காலையில் மண்டைத் தீவுச் சந்தியில் வெட்டி எறியப் பட்டமை யாழ் குடாநாடு முழுவதும் அச்சத்தை ஏற்படுத்தியது.

1977 தேர்தலுக்குப் பின்னரும் கொழும்பிலும் மலையத்திலும் தமிழ் இன அழிப்புத் தாக்கதல்கள் தொடர்ந்தன. 1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4வது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் 11 பேரை இனஅழிப்புச் செய்து மக்கள் மேல் தாக்குதல்களை நடாத்திப் பண்பாட்டு இனஅழிப்பை தொடங்கிய சிறிலங்கா 1981 மே மாதம் 31 இல் ஆசியாவின் இரண்டாவது பெரிய 96000 நூல்களுடன் இருந்த யாழ் நூலகத்தையும் யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிவேலு யோகேஸ்வரனின் வீட்டையும் யாழ்ப்பாண நகரின் கடைகளையும் எரித்து ஈழத்தமிழரின் பண்பாட்டுத் தலை நகரமெனப்பட்ட யாழ்ப்பாணத்துள்ளேயே ஈழத் தமிழ் மக்கள் மேலான தாக்குதல்களை ஆரம்பித்தனர். இவற்றின் தொடர்ச்சியாகவே 1958ம் ஆண்டின் ஈழத்தமிழின அழிப்பின் வெள்ளி விழாவாக 1983 ஜூலை ஈழத்தமிழின அழிப்பை 23 முதல் 30 வரைநடாத்தி உலகில் தமிழர்கள் அரசியல் புகலிடம் கோரி வாழும் அளவுக்கு ஈழத்தமிழர்களை அவர்களின் வீடுகளில் இருந்து வெளியேற்றும் இனங்காணக் கூடிய அச்சத்தை அவர்களின் வாழ்வாக்கினர்.

**அனைத்துலகப் பார்வையில் 1983 ஜூலை ஈழத்தமிழின அழிப்பு திட்டமிட்ட இனப்படுகொலை**

அனைத்துலக ஜூரிகள் ஆணையகத்தின் போல் செய்கர்ட் *(Paul Seigart)* அவர்கள் 1983 ஜூலை மாதத்தில் நடந்தவற்றை குறித்த விசாரணை அறிக்கையை *Sri Lanka Mounting tragedy of errors* என்னும் தலைப்பில் வெளியிட்ட பொழுது "இந்தத் தாக்குதல்கள் சிங்களவர்களிடை திடீரென ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பால் ஏற்பட்டவொன்றல்ல. அவ்வாறே இந்தத் தாக்குதல்கள் தொடங்கப் பெறுவதற்கு முதல்நாள் 13 சிங்கள இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்ட செய்தி ஊடகங்களில் வெளிவருமுன்பே அதற்குத் துலங்கலாக இந்தத் தாக்குதல்கள் அமைந்தன என்பதும் உண்மைக்குப் புறம்பானது. இது ஏற்கனவே முன் கூட்டியே திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டவொன்று" என்று அறிவித்து "இந்தச் சாட்சியங்கள் வழி இந்தச் சிங்களவர்களின் வன்முறைகள் தமிழர்கள் மேலான இனஅழிப்பு நடவடிக்கை என்ற முடிவுவை எடுக்க வைக்கின்றது " என உலகுக்கு அனைத்துலக சட்டங்களுக்கு எதிரான தமிழின அழிப்பு எனத் தீர்ப்பாக அறிவித்தது.

04.08. 1983ம் ஆண்டு இலண்டன் டைம்ஸ் "சிறிலங்கா இராணுவம் கொலைகளையும் தமிழர் வீடுகளையும் வர்த்தக நிலையங்களையும் கொள்ளையடிப்பதையும் எந்தவித பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது ஊக்கப்படுத்தியதுமல்லாமல் இவற்றில் தானும் பங்கேற்றும் உள்ளது" என உலகுக்கு ஊடகப் பொறுப்புணர்வுடன் தெளிவாக வெளிப்படுத்தியது. இலண்டனின் ஆங்கில நாளிதழான 'த கார்டியனில்' பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 53 பேரின் கையொப்பத்துடன் 1983ம் ஜூலை ஈழத்தமிழின அழிப்புக்கான அனைத்துலக நீதியை வேண்டி அறிக்கை வெளியிடப்பட்டது.

மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களை இனப்படுகொலை செய்து, இனமதமொழி வெறித் தன்மையால் தமிழர்களை உயிருடன் எரித்தும் சிறுவர்களையும் ஈவிரக்கமின்றி பயங்கரமான முறைகளில் கொன்றழித்து, வைத்தியசாலைகளில் இருந்த தமிழ் நோயாளிகளைக் கூடத் தேடிச்சென்று கொன்று மிருகத்தனமான செயல்களால் கொன்றனர். இச்செயல்களால் 1983 ஜூலையில் சிங்களவர்கள் தமிழர்களை இனஅழிப்பு செய்தனர். என்பது வெளிப்படையாகவே உலகுக்கு உறுதிப் படுத்தப்பட்டது.

இத்தாக்குதல்களில் தமிழர்களை யாழ்ப்பாணத்துச் சித்தர் யோகர் சுவாமிகள் சோமசுந்தரப்புலவருக்கு "கொல்வார்கள் எரிப்பார்கள்" என்று ஏற்கனவே முன்னறிவிப்புச்செய்தது போலத் தமிழர்களை நிர்வாணப்படுத்திக் கேலி செய்து அவமானப்படுத்தினார்கள். தமிழ்ப் பெண்களைச் சிறுமிகளைக் கூடப் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கினார்கள். தமிழர்கள் நீண்டகாலத்தில் மனநோயாளிகளாக உடல் வலுவிழந்தவர்களாக வாழ வைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படை நோக்குடன் பயங்கரமான சித்திரவதை முறைமைகளை கையாண்டார்கள்.

1983 ஜூலை 23 முதல் 30 வரையான ஈழத்தமிழின அழிப்புக்கு முன்னரே ஈழத்தமிழர் வரலாற்றில் காந்தியக் கொள்கையுடன் ஆதரவு தேடிய மக்களுக்கு டொலர் பண்ணை, கென்ட் பண்ணை என இரு விவசாயப் பண்ணைகளை தமிழரின் விளைச்சல் தரையான வன்னி மாவட்டத்தில் அமைத்து இல்லிடமும் உணவும் ஆடையும் கொடுத்து அவர்கள் மண்ணில் விவசாயம் செய்து பாதுகாப்பான சூழலில் வளர்ச்சிகளுடன் வாழ உதவியமைக்காகச் சிறிலங்காவின் அமைச்சரின் ஆணையில் கைதாக்கப்பட்டுச் சிறிலங்கா சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களில் 63 வயதினராக தலைசிறந்த கட்டிட நிர்மாண வரைபடக் கலைஞராக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலைசெய்து அனுபவமிக்க டேவிட் ஐயாவை பனாகொடை இராணுவ முகாமைச்சார்ந்நதவர்கள் ஆண் பெண் பள்ளிமாணவர்களின் முன்பாக நிறுத்தி ஆடைகளைக் களைந்து அவமானப் படுத்தினார்கள். இவர்களுக்கு உணவை நாய்போல நாலுகாலில் தவழ்ந்து போய் எடுங்கள் உங்கள் இனத்தவர் நாய்கள் எனக் கூறி தன்மானத்தை இழக்க வைத்தனர். முழங்காலில் நடந்து திரியுங்கள் உங்கள் இனத்தவர் குற்றவாளிகள் ஆதலால் முழங்காலில் நிற்க வேண்டியவர் என்று சித்திரவைதைப்படுத்தினர். வெறும் தரைகளிலேயே படுக்க வைத்து கைகால்களைக் கட்டிப் போட்டுக் குப்புறமாகவே வாகனங்களில் தூக்கி வீசி பயணங்களை அந்த நிலையில் செய்ய வைத்தனர். இறுதியாக வெலிகடைச் சிறையில் டாக்டர் ராஜசுந்தரம் அவர்களை துடிக்கத் துடிக்க அடித்துக் கொண்டனர். இத்தனைக்கும் இவர்கள் இருவரும் காந்திய வழியில் வாழ்வுக்கு ஏங்கிய மக்களுக்கு இல்லிடமும் உணவும் உடையும் வேலை வாய்ப்பும் அளித்தது அல்லால் வேறு எந்தக் குற்றமும் செய்ததில்லை. இந்த இரு வரது வரலாறே உலகின் கண்களில் காந்திய அடிப்படையில் செயற்பட்டவர்கள் கூட இனஅழிப்புக்குள்ளானமைக்குச் சான்றாகவுள்ளது.

தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டன. இனமாகக் கூடி வாழ்தல் இன்று வரை சிறிலங்கா அரசினால் திட்டமிடப்பட்ட முறையில் சிதைக்கப்பட்டு வருகிறது. 1983 யூலை இனஅழிப்பில் 18000 வீடுகள் 5000 தமிழர் வர்த்தக அமைப்புக்கள் முற்றாகவோ பகுதியாகவோ அழிக்கப்பட்டுத் தமிழர்களின் நாளாந்த வாழ்வாதாரங்கள் சிதைக்கப்பட்டன. சிறில் மத்தியூ என்கிற ஐக்கிய தேசியக்கட்சியின் அமைச்சரும் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவினது நண்பரும், இவரது உறவினரும் அரசியல் குருவுமான முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதியும் போர் என்றால் போர் என இலங்கைத் தீவினதும் உலகினதும் மூத்த குடிகளான ஈழத்தமிழர்கள் மேல் "மக்கள் மேலான யுத்தத்தைப் பிரகடனப்படுத்தி அதனை இனஅழிப்பாகவே செய்வதற்காக 1979 இலேயே அரசியல் விழிப்புணர்வுற்ற ஈழத் தமிழர்களைக் கண்ட இடத்தில் சுடவும் சுட்ட இடத்தில் எரிக்கவும் அனுமதிக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி யாழ்ப்பாணத்துக்குத் தனது மருமகனும் படைத்தளபதியுமான கெக்டர் கொப்பேகடுவவை அரசியல் விழிப்புணர்வுள்ள இளையோரை டிசம்பர் மாதத்துள் கொன்றழிக்கும்படி உத்தரவு வழங்கியவருமான ஜே ஆர் ஜயவர்த்தனாவின் நம்பிக்கைக் குரியவருமானவரே தலைமைதாங்கி வாக்காளர் பதிவுகளைச் சிங்களக் காடையர்களுக்கு வழங்கி எரிக்கவும் கொள்ளையடிக்கவும் கொன்றழிக்கவும் உத்தரவு இட்டதுமல்லாமல் அழிப்பு நடைபெறும் இடங்களில் தானே நின்று அனைத்து அரசவளங்களையும் அழிப்புகளுக்குப் பயன்படுத்தவும் இதனைச் சிறிலங்காப் படைகள் ஊக்குவித்து சட்டத்தை ஒழுங்கை நடைமுறைப்படுத்தாது செயற்பட படைகளுக்கு ஆணை வழங்கியவருமாக உள்ளார். இவரதும் இவரோடு ஒத்துழைத்தவர்களதும் செயற்பாடே வெலிகடைச்சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலை இயக்கத்தின் நிறுவனர்களான குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் ஆகிய தமிழ் இளம் தலைவர்கள் உட்பட 53 பேர் இந்தக்கலவரக் காலத்தில் இனப்படுகொலைக்கு உள்ளாகினர். இதில் குட்டிமணி தான் இறந்தாலும் தனது கண் தானம் செய்யப்பட வேண்டும். அதன் வழி தன் கண் அதனைப் பெறுபவர் வழி தமிழீழத்தின் விடுதலையைக் காண உதவ வேண்டுமென்ற இறுதி விண்ணப்பம் நடைமுறையாகி விடக் கூடாது என்ற அடிப்படையில் அவரின் கண்களைத் தோண்டி எடுத்து இனப்படுகொலை செய்யப் பட்டார்.

**அனைத்துலகத் தண்டனை நீதி பரிகார நீதி கிடைக்காத 41 ஆண்டுகள்**

சிறிலங்கா அரசின் அரசியல் கொள்கையாக கோட்பாடாக ஈழத்தமிழின அழிப்பு முன்னெடுக்கப்பட்டு அதன் வழியான இனப்படுகொலைகள் இனத் துடைப்புக்கள் பண்பாட்டு இனஅழிப்புக்கள் சிங்கள பௌத்த இனத்துக்கான சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக வளர்ச்சி என்ற

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## திருகோணமலை ... தொடர்ச்சி ...

தலைவராகவும் பணிபுரிந்துள்ளார்.

இதனை விட 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை தமிழரசு கட்சியின் கனடாக் கிளைச் செயலாளர் தலைவர் ஆகிய பொறுப்புகளிலும் பணியாற்றி, இந்தக் காலப் பகுதியில் தமிழரசு கட்சியின் செயற்பாடுகளுக்கு அதிக நிதியுதவி கிடைக்கவும் முன்னின்று உழைத்தார் என்பதோடு, 2018 ஆம் ஆண்டு 360 உறுப்பினரோடு இருந்த தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளை உறுப்பினர்களின் தொகையை 5000 ஆக உயர்த்தி 60 வட்டார கிளைகள் 6 கோட்டக் கிளைகள் ஒரு மாவட்ட கிளை என்ற அடிப்படையில் பிரமிட் வடிவில் திருகோணமலை மாவட்ட தமிழரசு கட்சியை கட்டமைத்துள்ளார் என்பதோடு தமிழரசு கட்சிக்குத் திருகோணமலை மாவட்டத்தில் ஒரு மாவட்ட பணிமனை இல்லை என்ற குறையை போக்கி, பணிமனை ஒன்றை திருகோணமலை நகரில் திறந்து 2018 தை மாத முதல் நடத்தி வருகின்றார்.

வயோதிபம் காரணமாக திருகோணமலை மண்ணின் தமிழ் மக்களின் பிரதிநிதி சம்பந்தன் திருகோணமலைக்கு வராத சூழலில், குகதாசன் ஐயா அவர்கள் புத்த பிக்குகள், வனத்துறை, வன விலங்குத் துறை, தொல்பொருள் துறை, எல்லை நிர்ணயக் குழு, துறைமுக அதிகாரசபை, ஆக்கிரமிப்பாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலப்பறிப்புக்கு எதிராக இலைமறைகாயாக இருந்து தன்னால் முடிந்ததைச் செய்து வருகின்றார் என்பதே யதார்த்தமாகும்.

**முற்றும்**

## உலகின் மதுபான ... தொடர்ச்சி ...

டொலர்கள், அதற்கு அடுத்த நிலையில் அமெரிக்கா உள்ளது. அது 60 பில்லியன் டொலர்களை ஈட்டியுள்ளது. மூன்றாவது இடத்தில் இந்தியா உள்ளது. அதன் வருமானம் 20 பில்லியன் டொலர்கள்.

மதுபான விற்பனையால் உலக நாடுகள் 2022 ஆம் ஆண்டு 390 பில்லியன் டொலர்களை வரியாக சம்பாதித்துள்ளன. இது உலகின் மிக முக்கிய 20 பொருளாதார நாடுகளுக்கு இணையனது. உற்பத்தியாளர்கள் 120 பில்லியன் டொலர்கள் பெறுமதியான உற்பத்தி மூலப்பொருட்களை கொள்வனவு செய்துள்ளனர். அதில் அரைப் பங்கு விவசாயத்துறைக்கு சென்றுள்ளது.

## அவசரமாக ... தொடர்ச்சி ...

முதலாவது, கடந்த வருடம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு, தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்ட பின்னர் நிதி இல்லை என்ற காரணத்தைக் கூறி அது இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது. ஐ.தே.க. மிகவும் பலவீனமான நிலையில் இருந்தது மட்டுமன்றி, ஜே.வி.பி, மற்றும் சஜித் அணி என்பன அதிகளவுக்கு வெற்றிபெறும் என்ற மதிப்பீடுகளும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தவிர்க்கப்பட்டமைக்குக் காரணம். அடுத்து வரக்கூடிய தேர்தல்களிலும் அது பாதிப்பை ஏற்படுத்தும் என ரணில் அப்போது கணித்திருக்கலாம்!

இப்போதும் தேர்தல் கள நிலைமைகள் எவ்வாறுள்ளன என்பது திட்டவட்டமாகக் கூறக்கூடிய நிலை இல்லை. சஜித் அணியை ரணிலுடன் இணைப்பதற்காக சர்வதேச சக்திகள் சில முன்னெடுத்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை. அதனைவிட, ராஜபக்ஷக் களுடன் இணைந்தால் தமிழ், முஸ்லிம், மலையக வாக்குகள் கிடைக்காது. ராஜபக்ஷக்களை பகைத்தால் சிங்கள வாக்குகள் கிடைக்காது என்ற தர்ம சங்கட நிலை ரணிலுக்கு. இதனால், தேர்தலை தள்ளிவைப்பதற்கு ரணிலுக்குள்ள ஒரே துரும்புச் சீட்டு 22 என்கின்றார்கள் எதிரணியினர்.

ஆனால், ரணில் எவ்வாறான உபாயத்துடன் செயற்படுவார் என்பது ஊகங்களுக்கு அப்பாற்பட்டது. அது அவருக்கு மட்டும்தான் தெரியும்.

• • •

## கல்வி... தொடர்ச்சி ...

மொழிக்கும் ருசிய மொழிக்கும் மாற்றாக ஃபின்னிஷ் மொழி அடிப்படையிலான தாய் மொழிக் கல்வி பரவலாக்கம் கண்டது.

சுவீடிஷ், ருசிய ஆக்கிரமிப்பில் இருந்த ஃபின்லாந்தின் மொழிக் காப்பாற்றப்பட்டதற்கு ஆசிரியர்களின் பெரும்பங்கு உண்டென்பது வரலாறு. ஃபின்லாந்து நாட்டில், குரல்வழிக் கதைச் சொல்லிகள் இருந்து வந்தனர். கலெவாலா (Kalevala) என்றொரு பண்பாட்டு இலக்கியக் காவியத்தினை, அதில் இடம்பெற்றிருக்கும் ஃபின்னிஷ் மொழி, பண்பாடுகளின் கதைகளை மக்களோடு மக்களாக அமர்ந்துக் கடத்தியவர்கள், ஆசிரியர்களாக மாறினர். ஃபின்னிஷ் மொழிக் காப்பாற்றப்பட்டமைக்கும் இத்தகைய கலெவாலா ஆசிரியர்களே காரணமாகத் திகழ்ந்திருக்கின்றனர்.

### தனித்துவமானக் கல்விக் கோட்பாடுகள்:

தேசிய உணர்வெழுச்சி மலர்ச்சிப் பெற்ற, ஃபின்னிஷ் மொழி ஆட்சி மொழியாக்கப்பட்ட, அதே காலக்கட்டத்தில் தான், ஃபின்லாந்து கல்வித்துறைச் சீர்த்திருந்தங்கள் பல்வேறு மாறுதல்களையும் அடையத் தொடங்கிற்று. தலைமைக் கல்வித்துறை ஆணையராக இருந்த (ஃபின்லாந்தின் தொடக்கக் கல்வியின் தந்தை (பிதாமகர்)) யூனோ சைக்னெயெஸ் (Uno Cygnaeus), 1857இலேயே ஆட்சிப்பேரவைக்கு (Senate) அளித்தப் பரிந்துரையில், "அனைத்து ஃபின்னிஷ் நாட்டுக் குழந்தைகளுக்குமான சமவுரிமையுள்ளக் கல்வியை வழங்க வேண்டும், நகர மன்றங்கள் பள்ளிகளை உருவாக்கி நிர்வகிக்க வேண்டும்" என்று எடுத்துரைத்தது ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆட்சிப் பேரவை ஆணை வழங்கியது.

ஃபின்லாந்து கல்வித்துறை செயற்பாடுகளில் நாம் கவனிக்க வேண்டிய ஒன்று, 1866இல் நிறைவேறிய தொடக்கக் கல்வித் தீர்பாணை (Decree on elementary education 11 May). ஃபின்லாந்து கல்வி வரலாற்றில் முறைப்படுத்தப்பட்டக் கல்வித்திட்டமாக மாணவ, மாணவியர்களின் தேவையை மையப்படுத்தித் தொடங்கப்பட்ட முதல் படி எனலாம். ஆனாலும், 1866ன் தீர்ப்பாணையின்படி, கட்டாயக் கல்விக்கான சட்ட அங்கீகாரம் இல்லை, மாறாக, கல்வி வளர்ச்சிக்கான வழிகாட்டுதல் மட்டுமே நிரம்பியிருந்தன. அவற்றோடு, அன்றைய கால தேசிய கட்டுமானத்திற்கான அவசியத்தின் பேரில் கல்வி வளர்ச்சியும் அரசியல் வரலாற்றின் அங்கமாகவே தொடர்ந்து வந்தது.

இத்தீர்ப்பாணையின் படி, நகரத்தில் உள்ள 8 வயது முதல் 14 வயதான குழந்தைகளுக்கு 6 ஆண்டுகள் தொடக்கக் கல்வியும் சிற்றூர்களின் குழந்தைகளுக்கு 4 ஆண்டுகள் தொடக்கக் கல்வியும் என தீர்மானிக்கப்பட்டது. இக்காலக்கட்டங்களில், பெருநகரங்களில் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்புகளிலும் சிற்றூர்களில் தேவாலயங்களின் கட்டுப்பாட்டிலும் பள்ளிகளின் நிர்வாகம் இருந்தன என்பதனை மீண்டும் நினைவுப்படுத்திக் கொள்வோம். அதன்பின்னர், தேசிய மறுமலர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட ஆட்சிமன்றக் குழுவின் ஒன்றான சமயசார்பற்ற ஆணையத்தினர் (Secular Authorities) தொடக்கப்பள்ளிக் கட்டுப்பாடுகள் மற்றும் அதனைச் செயல்படுத்தும் 'அரசியல் அதிகார' உரிமையை 1869இல் கையில் எடுக்கின்றனர்.

இக்காலக்கட்டத்தில், பொதுமக்களுக்கான கல்வியியல் முழுமையான பரவலாக்கம் அடியந்து அனைத்துத் தரப்புக் குழந்தைகளும் பள்ளிக்கு வரவேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 1891இல் ஃபின்லாந்தின் ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீட்டில் இரண்டாம் இடத்தில் பள்ளிக்கல்வித்துறைக்கென பிரிக்கப்பட்டிருந்தன.

1898இல் இயற்றப்பட்ட பள்ளி மாவட்டச் சட்டத்தின் படி, கிராமசபைகளும் பள்ளி மாவட்ட நிர்வாக எல்லை, அதன் செயற்பாடுகள், தேவைகளை முடிவுச்செய்யலாம் என ஆணை வழங்கப்பட்டது, குறிப்பாக, குழந்தைகள் கல்விக் கற்க 5 கி.மீ தொலைவிற்கு மேல் பயணிக்க வேண்டியச் சூழல் குறைக்கப்பட்டன. ஒரு குறிப்பிட்டப் பகுதியில் பள்ளிச் செல்லும் வயதுள்ள 30 குழந்தைகள் இருந்தால், அங்கு ஒரு பள்ளிக் கட்டவேண்டும் என்ற அச்சட்டம் வலியுறுத்தியது. http://ijse.padovauniversitypress.it/system/files/papers/2014_2_3.pdf

19ஆம் நூற்றாண்டின் நடுக்காலப் பகுதியில், பண்பாட்டு, நாகரீகக் கண்காணிப்பிற்கென 'Bildung – பில்டங்கு' உருவாக்கப்பட்டது. ஜெர்மானிய மொழியில் பயிற்சி, கல்வி, பண்பாடு என்றும் மொழிப்பெயர்க்கலாம். தத்துவம், கல்விக் கோட்பாடுகளை இணைக்கும் தனி மனித, சமூகப் பண்பாட்டு வளர்ச்சியை உருவாக் கும் தன்-வளர்ச்சி (self-cultivation) என்றும் விளக்கப்படுத்தலாம். ஸ்னெல்மென் (Snellman) அவர்கள், "பில்டங்கு கோட்பாட்டை, மனிதநேயம், தேசியக்கட்டமைப்பு, தனிநபர்களின் வளர்ச்சி" என வரையறுத்தார். ஃபின்லாந்தின் பில்டங்கு குழுதான் பண்பாடு, கல்வித்துறைச் சட்டங்களையும் நிதி ஒதுக்கீடுகளையும் வரையறுக்கின்றன.

### கல்விக் கோட்பாடுகளுக்கான தேடலும் தேச நலனும்:

கல்வித்துறைக்கான அடிப்படைக் கட்டுமானங்கள், தேசிய மறுமலர்ச்சிக்கான அடிப்படைச் சித்தாந்தங்களை உருவாக்கிக் கொண்டிருந்த ஃபின்லாந்தினர், தங்களுக்கான தனித்துவமான கல்வித்திட்டங்கள் தொடர்பான தேடல்களிலும் இறங்கினர். ஃபின்லாந்தின் தொடக்கக் கல்வியின் தந்தை (பிதாமகர்) என்றழைக்கபடும், யூனோ சைக்னெயெஸ் (Uno Cygnaeus) - 1863 முதல் 1869 வரை தலைமைக் கல்வித்துறை ஆணையராக இருந்தபொழுது, சுவீடன், டென்மார்க், ஜெர்மனி, சுவசர்லாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்குப் பயணித்து, தொடக்கக் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் குறித்த ஆய்வுகள் செய்துவந்தார். ஜெர்மானி அறிஞர்களான ஏர்பர்ட் (Herbert), சில்லர் (Ziller) மற்றும் சுவிசர்லாந்து அறிஞரான பெசுடாலோசியன் (Pestalozzian) வரையறுத்தக் கல்வியியல் கோட்பாடுகளின் கூட்டு வடிவத்தினையும் ஆய்வு செய்து வகுப்பறைகளுக்கான செயற்பாடுகளுக்கும், ஃபின்லாந்து கல்வியின் தொடக்கநிலை வகுப்புகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி வகுப்புகளுக்கு பரிந்துரைத்தார்.

**தொடரும்**

## முதலீடு தொடர் ... தொடர்ச்சி ...

இறந்த ஆறு பேரும் வியட்னாமைச் சேர்ந்தவர்கள் என்ற போதும் அதில் இருவர் அமெரிக்க கடவுச்சீட்டை கொண்டவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் நிலமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சுற்றுலாத்துறையை முக்கிய வருமானமாகக் கொண்ட தாய்லாந்தில் இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வருடம் அங்கு 35 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் பல பத்து பில்லியன் டொலர்கள் வருமானமாக கிடைக்கும்.

## கிள்ளிக் கொடு ... தொடர்ச்சி ...

எனவே அரசியல் விடயங்களில் வாக்களிக்கும் தகைமைஅவனுக்கு இல்லையென்றே கூறுவேன் ‘ என்றும் வர்க்க ரீதியான முன்வைப்புக்களும் இடம்பெற்றிருந்தன. இத்தனை எதிர்ப்புக்கும் மத்தியில் இந்திய வம்சாவளி மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குரிமை 1948 இல் பறிக்கப்பட்டு அவர்கள்நிர்க்கதி நிலைக்கு உள்ளாக்கப்பட்டமை கொடுமையிலும் கொடுமையேயாகும். இது பல்வேறு துறைகளின் பாதிப்பிற்கு அடித்தளமானது.

இதேவேளை அரசியல் பாரபட்சங்கள் மற்றும் இனவேற்றுமையின் காரணமாக பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கக்கூடிய சுகாதார பிரச்சினைகளும் அதிகரித்து வருகின்றன. உதாரணமாக பெருந்தோட்டப் பெண்கள் மத்தியில் அரசியல் நோக்கோடு செய்யப்படும் கட்டாயக் கருக்கலைப்புக்கள், கருத்தடைகள் மற்றும் நிரந்தர மலடாக்கல் போன்றவை இவர்கள் மத்தியிலான சுகாதார பிரச்சினைகளில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

மலையகத் தமிழரின் சனத்தொகையிலும், அவர்களின் பாராளுமன்ற அங்கத்துவத்திலும் வீழ்ச்சி ஏற்படுத்துவதற்காக செய்யப்படும் இம்முறைகள் இனப்படுகொலைக்கு ஈடான பிரச்சினைகளாக விமர்சிக்கப்படுகின்றன என்று 2005 ம் ஆண்டு (Foundation for Co - Existence,2005) தகவலொன்று வலியுறுத்துகின்றது. ஆரம்பகாலம் தொட்டு இன்று வரை இச்சமூகத்தினர் மத்தியில் தொடரக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகளில் மந்தபோஷணை மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

அதிலும் பிரதானமாக பெருந்தோட்டத் தாய்மார் மற்றும் 5 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு மத்தியில் மந்தபோஷணை அதிகளவில் பதிவுபெறுவதாக 2017 ம் ஆண்டின் உலகவங்கி அறிக்கை குறிப்பிடுகின்றது. இதனால் சிறுவர்களின் கல்வியுரிமையும் பறிபோகும் அபாயமுள்ளது. கல்விமையச் சமூகமாக உருவெடுக்க வேண்டிய மலையக சமூகத்துக்கு இத்தகைய விடயங்கள் ஒரு பாரிய அடியேயாகும்.

**ரொமோயா ஒபொகாடாவின் கருத்து**

1992 ம் ஆண்டில் பெருந்தோட்ட மக்களின் சமூக - பொருளாதார நிலைகுறித்து ஆராய்வதற்கென ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இவ்வாணைக்குழு பின்வரும் விடயங்களில் இம்மக்கள் பின்தங்கிய இருப்பதாக சுட்டிக் காட்டியது. இதனடிப்படையில் குடியுரிமை, தொழில்வாய்ப்புக்கள், கல்வி, தொழிற்பயிற்சி, வீட்டுவசதியும் சுகாதாரமும், சமூகநலன் பேணல், மின்சார வசதி, தொடர்பாடல் வசதிகள், சமூக - கலாசார மேம்பாடு, விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு போன்றவற்றிற்கான வசதிகள், பிரதான தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்புகள் போன்றன அவையாகும்.

இதேவேளை இலங்கையில் அடிமைத்தனத்தின் சமகால வடிவங்கள் பல்பரிமாண முடையவையாகக் காணப்படுகின்றன. குறிப்பாக சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் பெருந்தோட்டங்களில் பணிபுரிவதற்காக இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மலையகத் தமிழர்கள் நாளாந்தம் பல்வேறு வடிவங்களிலான ஒடுக்கு முறைகளுக்கு முகங்கொடுத்து வருவதாக அடிமைத்தனத்தின் சமகால வடிவங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா ஏற்கனவே தெரிவித்திருந்தமையும் நோக்கத்தக்கதாகும்.

மேலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் மிகுந்த கரிசனைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. அவர்கள் இன்னமும் காலனித்துவ ஆட்சியின்போது நிர்மாணிக்கப்பட்ட ‘லயன்’ வீடுகளில் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்றும் ஒபொகாடா தெரிவித்திருந்தார். இந்நிலையில் தோட்ட மக்களின் பின்னடைவு பூர்வீகத்துடன் தொடர்புபட்டதல்ல என்று ஐ.நா.விசேட அறிக்கையாளருக்கு இலங்கை அரசாங்கம் பதிலளித்திருந்தது.

**வரைபாதை (Road Map)**

இதனிடையே மலையக மக்கள் இலங்கையில் மிகவும் பின்தங்கிய பிரிவினராக இருப்பதை தாம் ஏற்றுக் கொள்வதாகவும், மலையக மக்களுக்கு மேலும் உதவிடும் சந்தர்ப்பங்களை எதிர்நோக்க அமெரிக்க அரசு விரும்புவதாகவும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதிநிதி களிடம் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் அண்மையில் வலியுறுத்தி இருக்கின்றார். இச்சந்திப்பின்போது தமிழ் முற்போக்கு கூட்டணி நாட்டில் அடுத்துவரும் அரசியல் மாற்றங்களையொட்டி வகுத்துவரும் வரைபாதை (Road Map) எழுத்து மூலமான ஆவணமொன்றையும் அமெரிக்க தூதுவரிடம் கையளித்துள்ளது.

வாழ்வாதார காணி, வதிவிட காணி, கல்வி, தொழில்பயிற்சி, நிலச்சார்பற்ற சமூக சபை ஆகிய முன்னுரிமை விடயங்கள் பற்றிய விபரங்கள் பலவும் இந்த ஆவணத்தில் அடங்கியுள்ளன. மேலும் தினக்கூலி தொழிலாளர்கள் பெருந்தோட்டத் துறையில் பங்காளர்களாக முறைமாற்றம் பெறல், பெருந்தோட்டத்துறையில் வாழ்கின்ற அனைத்து நிலமற்ற குடும்பங்களுக்கு வதிவிட காணி வழங்கல், கல்வித்துறை தொடர்பில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான விசேட ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமைத்தல், மலையக பெண்களுக்கான தாதியர் பயிற்சிக் கல்லூரி அமைத்தல் மற்றும் உலகளாவிய நாடுகளில் பரந்து வாழும் சிறுபான்மை இனத்தவர் மத்தியில் அமையப் பெற்றுள்ள நிலச் சார்பற்ற சமூக சபைகள் பற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொள்ளல் ஆகியன குறித்த கலந்துரையாடல்களும் இதன்போது இருதரப்பினருக்கும் இடையே இடம்பெற்றுள்ளன.

மலையக மக்களின் பின்தங்கிய நிலைமைகள் பலவாறாக வெளிப்படுகின்ற போதும் அவற்றுக்கான உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதில் இன்னமும் இழுபறியான நிலைமைகளே மேலோங்கிக் காணப்படுகின்றன. இந்நிலையில் இலங்கை அரசாங்கம் இதயசுத்தியுடன் இவற்றுக்கான உச்சகட்ட தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முனைவதோடு, இந்தியவம்சாவளி மக்களின்நலன்களில்அக்கறை கொண்ட சர்வதேச நாடுகளும் இச்சீரிய பணிக்கு தோள் கொடுக்க வேண்டும். இவ்விடயத்தில் இந்தியா, பிரித்தானியா என்பவற்றின் வகிபாகம் அதிகளவில் எதிர்பார்க்கப்படுகின்றது.

• • •

## ட்ரம்பின் பாது ... தொடர்ச்சி ...

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு அதனை நாம் படையினரை நிறுத்த பயன்படுத்தவில்லை. ஆனால் அந்த கட்டிடத்தின் உள்ளகப் பகுதிகளை எமது பாதுகாப்பில் எடுத்திருந்தோம் என இரகசியப் பிரிவின் தலைவர் கெம்பெலி சியாற்றில் கடந்த புதன்கிழமை(17) தெரிவித்துள்ளார்.

டொனால்ட் டிறம்ப் அமெரிக்காவில் உள்ள பென்சல்வேனியாவில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் வைத்து குறிபார்த்து சுடும் கொலையாளியால் கடந்த சனிக்கிழமை(13) சுடப்பட்டார்.

முதலாவது குண்டு குறிதவறி அவரின் வலது காதின் மேற்பகுதியை தாக்கியவுடன் டிறம் தனது தேர்தல் பரப்புரை மேடையினுள் மின்னல் வேகத்தில் தன்னை மறைத்துக் கொண்டதால் அடுத்து சுடப்பட்ட ரவைகளில் இருந்து தப்பியுள்ளர். இந்த சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

20 வயதான தோமஸ் மத்தியூ குறூக்ஸ் என்ற இந்த கொலையாளி கூட்டம் இடம்பெற்ற இடத்தில் இருந்து 150 மீற்றர் தொலைவில் உள்ள கட்டிடம் ஒன்றின் கூரையில் இருந்தே ஏ.ஆர்-15 ரக துப்பாக்கியால் சுட்டுள்ளார். டிறம்பின் தலையை நோக்கி அவர் பல தடவைகள் சுட்டுள்ளார். உடனடியாகவே டிறம்பின் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த இரகசிய பாதுகாப்பு படையினரின் குறிபார்த்துச் சுடும் படையினர் கொலையாளியை தலையில் சுட்டு கொன்றுள்ளனர்.

ஆனால் அந்த கட்டிடத்தின் முழுமையான பாதுகாப்பையும் ஏன் இரகசியப் பிரிவினர் கையகப்படுத்தவில்லை என அமெரிக்க சிறப்புப் படையின் முன்னாள் அதிகாரி ஜோ கென்ற் கேள்வி எழுப்பியுள்ளார்.

இரகசியப் பிரிவின் தலைவரை அமெரிக்க அதிபர் ஜோ பைடனே நியமித்திருந்ததும் தற்போது கேள்வியை எழுப்பியுள்ளது.

• • •

## சாவகச்சேரி ... தொடர்ச்சி ...

செய்தி தொடர்பில் 1996 ஆம் ஆண்டு 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 14 இற்கு அமைய ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையாக பதிவுசெய்யப்பட்டு சாவகச்சரி ஆதார வைத்திசாலையின் பதில் மருத்துவ அத்தியட்சகர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழ்ப்பாணம்,

மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வடக்கு மாகாணம் ஆகியோரிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த விளக்க அறிக்கையை எதிர் வரும் 22.07.2024 இற்கு முன் சமர்ப்பிக்க பணிக்கப் பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளார்.

## ஹதீஸின் தாக்கு ... தொடர்ச்சி ...

இறக்கப்படவில்லை என துறை முகத்தின் தலைவர் இஸ்ரேலின் போக்குவரத்துத்துறை அமைச்சகத்திற்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற இழப்பை எந்த நிறுவனமும் சந்தித்திருக்காது. இது தொடர்பில் உடனடியான சந்திப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். தற்போதைய இழப்புக்களில் இருந்து மீள்வதற்கு அரசு மனிய உதவிகளை வழங்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த துறைமுகம் ஊடாகவே இஸ்ரேலுக்கும் ஐரோப்பா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்குமான வர்த்தகம் இடம்பெற்று வந்திருந்தது. ஆனால் தற்போது அந்த வர்த்தகம் முற்றாக பாதிப்படைந்துள்ளது.

## சாவகச்சேரியில் ... தொடர்ச்சி ...

இருக்கின்றார்கள். வைத்தியசாலையில் நடைபெறும் அசட்டையீனங்கள், ஊழல்கள் மற்றும் மோசடி களும் அதற்கு காரணமாகின்றன. சவாக்சேரியில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

**சுயேச்சை ... தொடர்ச்சி ...**

பிரித்தானிய கட்சிகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிளவைப் பெரிதுபடுத்தி, முஸ்லீம் மக்களுக்கு எதிரான உணர்வுகளுக்குத் தூபமிட்டு வருகின்றன.

இங்கே உண்மை மிகவும் தெளிவானது. முஸ்லீம்களாக இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன, பிரித்தானியாவில் வாழும் மக்களில் அநேகமானோர், காஸாவில் நடக்கும் படுகொலைகள் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்றும் அங்கு நீதி நிலைநாட்டப்படவும் வேண்டும் என்றே விரும்புகின்றார்கள். அது மட்டுமன்றி, ஐக்கிய இராச்சியத்தின் ஒரு மூலோபாய ரீதியிலான நட்பு நாடு என்று கருதப்படும் ஒரு நாடாக இருந்தாலும், அந்த நாடு, பன்னாட்டுச் சட்டங்களை மீறுகின்ற போதும், இனப்படுகொலையை மேற்கொள்ளுகின்ற போதும், அவற்றுக்கு எதிராகக் குரல்கொடுக்கும் ஆற்றலை தங்கள் பிரதிநிதிகள் கொண்டிருக்க வேண்டும் என்றே அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். அத்தோடு நின்றுவிடாது, பாலஸ்தீன மக்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றிய விடயத்தில், ஐக்கிய இராச்சியம் வகித்த வரலாற்றுப்பங்கை ஏற்றுக் கொள்கின்ற பிரித்தானிய மக்கள், கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட தவறுகளுக்குப் ஈடாக ஒரு கொள்கைவழி நடைமுறையை பிரித்தானியா இந்த விடயத்தில் பின்பற்ற வேண்டும் என்பதையே எதிர்பார்க்கின்றார்கள். இதனாலேயே, காஸா தொடர்பாக தொழிற்கட்சி கொண்டிருக்கும் கொள்கைகள், அந்த மக்கள் தொழிற்கட்சியை விட்டுச் செல்லக் காரணமாக அமைந்திருக்கிறது.

கடந்த தேர்தலில் நிகழ்ந்த இன்னொரு முக்கிய நிகழ்வு, *14* வீதமான வாக்குகளையும் பாராளுமன்றத்தில் நான்கு ஆசனங்களையும் தனதாக்கிக் கொண்ட தீவிர வலதுசாரிக் கொள்கையைக் கொண்டதும், குடிவரவுக்கு எதிரானதுமான கட்சி பெற்றுக்கொண்ட வெற்றியாகும். முன்னாள் யுகேஐபியின் *(UKIP)* தலைவரும் பிரெக்சிற் கொள்கையைத் தீவிரமாக முன்னெடுத்தவருமான நைஜல் பராஜ் *(Nigel Farage)*, இப்போது கிளாக்ரன் தொகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சீர்திருத்தக் கட்சி சார்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஆவார். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத போதிலும், குடிவரவு மற்றும் ஐரோப்பாவுடனான உறவு போன்ற விடயங்களில் பிரித்தானியக் கொள்கைகளை வடிவமைப்பதில், கடந்த காலத்தில் முக்கிய பங்கை அவர் வகித்திருக்கிறார். தற்போது அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஆகிவிட்டதால் இன்னும் அதிக செல்வாக்கை அவர் செலுத்துவார் என்பதை எதிர்பார்க்கலாம்.

பாராளுமன்றத்தில் உள்ளே இருந்து கொண்டு, குடிவரவு தொடர்பான விடயங்களில் கடுமையான கொள்கைகளைப் பின்பற்ற தொழிற்கட்சிமேல் அவர்கள் அழுத்தத்தைப் பிரயோகிப்பார்கள். இவ்வாறான அழுத்தத்திலிருந்து தன்னை விடுவித்து, பன்னாட்டுச் சட்டங்களுக்கு ஏற்ற வகையிலும், அறநெறி ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும், குடிவரவு மற்றும் அகதித்தஞ்சம் வழங்கும் விடயங்கள் தொடர்பான கொள்கைகளை நாட்டுக்குப் பயன் தரக்கூடிய வகையில் ஸ்ராமர் வகுக்க வேண்டியிருக்கும்.

பதின்நான்கு வருடங்களாகத் தொடர்ந்த, பழமைவாதக் கட்சியின் ஆட்சியில், பிரித்தானிய மக்கள் இழந்தது அதிகம். எமது வாழ்க்கை முன்னரை விட அதிகம் கஷ்டம் நிறைந்ததாக மாறிவிட்டது. எமது நாட்டின் பொதுச்சேவைகள் அனைத்தும் முடங்கிப்போகும் நிலைக்கு வந்து விட்டன. அதுமட்டுமன்றி, பாலஸ்தீனத்துக்கு ஆதரவான சுயேச்சை வேட்பாளர்களின் வெற்றி சுட்டிக்காட்டுவது போல, ஓர் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுத் துன்புறும் ஓர் மக்கள் சமூகம் மீது மேற்கொள்ளப்படும் ஓர் இனப்படுகொலை யுத்தத்துக்கு, எமது அரசு ஆதரவை வழங்கி வருவதை நாம் பார்த்திருக்கிறோம். இந்த மக்களின் வரலாற்றை நிர்ணயித்ததில் காலனீய பிரித்தானியாவுக்கு அதிகமான பங்கு உண்டு.

மாற்றம் ஒன்று தேவை என்பது எல்லாரதும் எதிர்பார்ப்பு ஆகும். இதனால் தான் பழமைவாதக்கட்சிக்கு எதிராக மக்கள் வாக்களித்தார்கள். நாட்டின் தலைமைத்துவத்தைக் கையிலெடுக்கும் இத்தருணத்தில், தனது வெற்றி முழுமையானது அல்ல என்பதையும், தமது குறைகளைத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கையை மக்களில் அதிகமானோருக்கு அவரால் கொடுக்க முடியவில்லை என்பதையும் அவர் புரிந்துகொள்ள வேண்டும். தேர்தலில் மக்கள் அளித்திருக்கும் முடிவுகளை, தான் நன்கு புரிந்திருக்கிறேன் என்பதை ஸ்ராமர் செயலில் காட்ட வேண்டும். பழமைவாதக் கட்சியை நாம் முற்றுமுழுதாக நிராகரிக்கிறோம். ஆனால் நிபந்தனையற்ற வகையில் உங்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்பது அதன் பொருள் அல்ல.

ஐக்கிய இராச்சியத்தின் பிரதம மந்திரி என்ற வகையில், தான் ஆற்றிய முதலாவது உரையில், இந்த விடயத்தைத் தான் புரிந்துகொண்டிருப்பதாக வெளிப்படுத்திய ஸ்ராமர், இந்த நாட்டில் வாழும் எல்லா மக்களுக்கும் பிரதம மந்திரியாக தான் இருக்க விரும்புவதாகவும் குறிப்பாக தனக்கு வாக்களிக்காதவர்களுக்கும் பிரதமராக இருக்க விரும்புவதாக அந்த உரையில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விடயத்தை ஸ்ராமர் காத்திரமாக எடுப்பாராக இருந்தால் - உண்மையில் நாட்டுக்காக அவர் காத்திரமாக எடுத்தே ஆகவேண்டும் - தனது கட்சியிலிருந்து தான் வெளியேற்றிய இடதுசாரிக்கொள்கையையுடைய தொழிற்கட்சி உறுப்பினர்கள், தொழிற்சங்கங்கள், மற்றும் இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களது தேவைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், வெளிநாட்டுக் கொள்கையில், மனித உரிமையைக் கடைப்பிடித்து, பன்னாட்டுச் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் அனைத்துச் சக்திகள் போன்ற அனைவரையும் அவர் உள்வாங்க வேண்டும்.

சுயேச்சை வேட்பாளர்களையும், இடதுசாரிக் கொள்கையையுடைய சிறிய கட்சிகள் சார்ந்த பிரதிநிதிகளையும் அவர் அலட்சியம் செய்யக்கூடாது. காஸா, காலநிலை மாற்றம் போன்ற விடயங்களில் அவர்களது கருத்தையும் ஸ்ராமர் செவிமடுத்து, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவ்வாறு அவர் செய்யாவிட்டால், பழமைவாதக் கட்சியின் தோல்வியின் மீது அவர் பெற்றிருக்கும் வெற்றி, பொருள் அற்றதாகி விடும். சீர்திருத்தக் கட்சியிடமிருந்து அதிகமான அழுத்தத்தை அவர் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது மட்டுமன்றி இடதுசாரிக் கட்சிகளிடமிருந்து எதிர்ப்பையும் பொறுப்புக் கூறலுக்கான அழுத்தத்தையும் நிச்சயமாக அவர் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

பாலஸ்தீனத்துக்கு ஆதரவான இடதுசாரிக் கட்சிகள் கடந்த தேர்தலில், குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனால் போராட்டம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. பழமைவாதக்கட்சி வெளியேற்றப்பட்டுள்ள ஒரு சூழமைவில், தொழிற்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியுள்ள பின்புலத்தில், பலவிதமான கொள்கைகளைக் கொண்ட இச்சிறுகட்சிகள் ஒன்றுசேர்ந்து, காஸா விடயம் போன்ற தங்களுக்கு முக்கியமான விடயங்களில், உருப்படியான நடவடிக்கைகளை அரசு எடுக்க, அதற்கு அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

இதுவரை காலமும் ஐக்கிய இராச்சியத்தில் பின்பற்றப்பட்டு வந்த இரு கட்சி ஆட்சி தற்போது முடிவுக்கு வந்துவிட்டது என்பதை இந்தத் தேர்தல் சுட்டிக்காட்டுகிறது. தங்களது கட்சிக்குப் பிரமாணிக்கமாக இருப்பதைத் தவிர்த்து, தமது விழுமியங்களின் அடிப்படையில் மக்கள் வாக்களித்திருக்கும் இச்சூழலில், அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையில் இடது சாரிக்கட்சிகள் இருக்கின்றன என்பது அவர்களால் இங்கு சரியாகப் புரிந்துகொள்ளப்படவேண்டும்.,

**நன்றி: அல்ஜஸீரா**

**இலங்கை ... தொடர்ச்சி ...**

காலமாக துன்பங்களை சந்தித்து வருகின்றனர். நீண்டகாலம் தடுத்து வைக்கும் மற்றும் எழுந்தமானமாக கைது செய்யும் அதிகாரங்களை பயங்கரவாதச் சட்டம் அரசுக்கு வழங்குகின்றது.

ரணில் விக்கிரமசிங்கா *2022* ஆம் ஆண்டு அரச தலைவராக பதவியேற்றபின்னரும் இந்த சட்டம் தொடர்கின்றது. அனைத்துலக நாணய நிதியமும் இது தொடர்பில் *2023* ஆம் ஆண்டு கருத்தில் எடுத்திருந்தது.

*2015* ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் *2023* ஆம் ஆண்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாக மாற்றப்பட்டபோதும் அதுவும் மக்களை துன்புறுத்தும் சரத்துக்களைக் கொண்டுள்ளது.

எனவே இந்த சட்டத்தை அகற்றுவதற்கு இலங்கை அரசின் மீது அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா ஆகிய நாடுகள் அழுத்தங்களை மேற்கொள்ளவேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழு தனது *46/1* என்ற தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



## தமது சொந்த ... தொடர்ச்சி ...

ஒரே ஒரு வைத்தியருடனும், சில தாதிகளுடனும் 1970 களில் இயங்கிய மானிப் பாயில் உள்ள சாதாரணமான மருத்துவ மனையில் (Dispensary) மானிப்பாய் மக்கள் பல பிள்ளைகளை சுகமாக பிரசவித்து நல் வாழ்வு வாழ்ந்த காலம் போய், 4 மருத்துவ நிபுணர்கள் மற்றும் 25 வைத்தியர்களைக் கொண்ட மருத்துவமனையில் 2024 ஆம் ஆண்டு மகப்பேறோ அல்லது சாதாரண நோய்களுக்கான மருத்துவ சிகிச்சையோ பெறமுடியாத நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது என்பது உலக அதிசைய மாகவே பார்க்கப்படுகின்றது.

இலங்கை அரசின் இந்த நிகழ்ச்சிநிரலை உடைத்து மாகாணசபையின் கீழ் வரும் வைத்திய சாலையை இயங்க வைத்து அந்த பிரதேச மக்களின் உயிர்களை காப்பாற்ற முற்பட்டதுடன், தனியார் வைத்தியசாலையின் ஊடாக தமிழ் மக்களின் பணம் தனியார் நிறுவனங்களின் முதலாலிகளுக்கும், இலங்கை அரசிற்கு வரியாக வும் செல்வதைத் தடுத்து தமிழ் மக்களின் வறுமையை போக்கவும் முற்பட்ட வைத்தியர் அர்ச்சுனாவின் முயற்சி என்பது அந்த மக்களால் மட்டுமல்லாது உலகம் எங்கும் பரந்துவாழும் அனைத்து மக்களாலும் போற்றப்படும் நிகழ்வுகளையே நாம் இன்று காண்கின்றோம்.

எனினும் மிகப்பெரும் மருத்துவ கொள்ளைக் கும்பலுடன் மோதுவது என்பது ஒரு இரவில் முடிவுக்கு வந்துவிடும் செயலல்ல, இந்த மருத்துவ கொள்ளைக்கும்பல்களின் நடவடிக்கையால் தமிழ் முத்தில் அநியாயமாக கொல்லப்பட்ட மற்றும் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நீதி கிடைக்கவும், எதிர்காலத்தில் பாதிப்புக்களைச் சந்திக்கப்போகும் மக்களைக் காப்பாற்றுவதற்காகவும் நாம் அர்ச்சுனாவின் நடவடிக்கைகளை பலப்படுத்த வேண்டும் என்பதே எமக்குள்ள பணியாக உள்ளது.

தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டு, தமிழீழ விடுதலையை வென்றெடுக்கப்போவதாக கூறித் திரியும் அமைப்புக்களும், அரசியல் கட்சிகளும் தாம் யாருக்காக போராடுகிறோமோ அந்த மக்கள் ஒரு பேரவலத்தை எதிர்கொண்டு நிற்கும் போது ஓடி ஒளிவது என்பது அவர்களின் போலித் தனத்தை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டி நிற்கின்றது.

அர்சுனாவை தோற்கடிப்பதற்கு காரணங் களைத் தேடும் சில ஊடகங்களும், ஊடக வியலாளர்களும், அமைப்புக்களும், போலியான தேசியவாதிகளும், அரசியல்வாதிகளும் அப்பாவி மக்களுக்கு இழைக் கப்பட்ட அநியாயங் களுக்கான நீதிகோருவது தொடர்பில் அல்லது அவை எதிர்காலத்தில் இடம் பெபெறுவதைத் தடுப்பது தொடர்பில் எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகயையும் மேற்கொள்ளத் தயாராக வில்லை என்பதே இன்றைய யதார்த்தம்.

அதாவது தமிழ் அரசியல்வாதிகள் மீண்டும் ஒருமுறை தமது சொந்த மக்களை தோற்கடித்துள்ளனர் என்பதை தான் கடந்த வாரங்களில் இடம்பெற்ற நிகழ்வுகள் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

• • •

## முட்டி மோதி ... தொடர்ச்சி ...

ஐத்தான்.

ஆனால், இப்போது 13 என்பதை இறுதி யான அரசியல் தீர்வாக எந்தத் தமிழ்க் கட்சியும் ஏற்றுக்கொண்டதில்லை. அவ்வாறு அவர்கள் சொல்லவும் இல்லை. ஆகவே 13 ஐ அடிப் படையாகக் கொண்ட வாக்குறுதிகளை தமிழ்த் தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற எந்தக் கட்சியும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதனை ஏற்றுக்கொண்ட எந்தத் தமிழ்க் கட்சியாலும் பயணம் செய்யசவும் முடியாது. அரசியலமைப்பில் உள்ள அந்த விடயத்தை அமுல்படுத்த வேண்டும். மாகாண சபைகள் இயங்க வேண்டும் என்பவை வேறு. இது இறுதியான அரசியல் தீர்வு இல்லை என்று அரசியல் கட்சிகள் அனைத்துமே சொல்லியிருக்கின்றன.

இந்த நிலையில் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் தரும் இந்த வாக்குறுதிகளை வைத்துக்கொண்டு தமிழ்ப் பொது வேட்பாளர் என்பதை தமிழ்க் கட்சிகள் எவ்வாறு நிராகரிக்க முடியும்? அதாவது அவர்கள் வாக்குறுதியளித்து விட்டார்கள். அதனால், தமிழ்ப் பொது வேட்பாளர் என்பதை கைவிடுவோம் என்று எவ்வாறு தமிழ்க் கட்சிகள் சொல்ல முடியும்? என்ற கேள்வி இருக்கின்றது. நிச்சயமாக இவர்களால் அவ்வாறு சொல்ல முடியாது. ஆகவே தமிழ்ப் பொது வேட்பாளருக்கான தர்க்க நியாயம் இப்போதும் அப்படியே இருக்கின்றது.

ஆனால், சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றுக்கு அவர்கள் வருவார்களாயின் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்துக்கான தர்க்க நியாயம் இல்லாமல் போகலாம். ஆனால், அப்படி ஒரு நிலை இருக்கின்றதா என்றால் நிச்சயமாக இல்லை. ஏனெனில் தென்னிலங்கை வேட்பாளர்கள் யாரும் அவ்வாறான ஒரு றிஸ்க்கை எடுக்கமாட்டார்கள்.

## மிகவும் பலம் ... தொடர்ச்சி ...

நிறுத்துவது தொடர்பில் நாம் எவ்வித தீர்மானமும் எடுக்க வில்லை. ஏனையவர்களின் ஒத்துழைப் புடனையே வேட்பாளரை நிறுத்துவோம்" என்றும் குறிப் பிட்டார்.

"நாம் அனைத்து சந்தர்ப்பங்க ளிலும் பொது வேட்பாளர் ஒருவரையே நிறுத்தினோம். தேர்தலின் பின்னர் எமது அரசாங்கமே அமையும்" முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று கொழும்பில் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

பொது ஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்க பெரேராவை களமிறக்கும் என்று செய்திகள் வெளிவந்திருக்கும் நிலையில் ஊடகவியலளர் களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மகிந்தராஜபக்ஷ இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பது தொடர்பில் பொது ஜன பெரமுன கட்சிக்குள் முரண்பாடு கள் தீவிரமடைந்திருக்கும் நிலையில் கருத் தொருமைப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிக ளிலும் ராஜபக்ஷக்கள் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## 1983 ஈழத்தமி ... தொடர்ச்சி ...

அரசியல் தத்துவம் 1956 முதல் இன்று வரை 78 ஆண்டுகள் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பது சமகால வரலாறாக உள்ளது. இதன் உதாரணமே இன்றும் சிறிலங்காவின் பௌத்த பிக்குகளின் மகாசங்கங்களும் சிறிலங்காப் படைகளும் இணைந்து செயற்படும் ஈழத்தமிழர் தாயக நில கடல் வளப்பகுதிகளில் விகாரைகளை அமைத்து அதனைத் தொல்லியல் திணைக்களம் சிங்களவர்கள் பூர்வீகப் பகுதிகள் எனச் சட்டத் தகுதியளிக்கும் இன்றைய அரசியலாகவும் உள்ளது.

ஆனால் இன்று 41 ஆண்டுகள் கழநித நிலை யிலும் இதுவரை இந்த 1983 ஜூலை ஈழத்தமிழின அழிப்புக்கான அனைத்துலகச் சட்டங்களின் அடிப் படையிலான எந்தத் தண்டனை நீதியோ அல்லது பரிகார நீதியோ இதுவரை வழங்கப் படவில்லை.

### முடிவுரை

**இந்த உலக நாடுகளதும் உலக அமைப்புக் களதும் ஈழத்தமிழர்கள் குறித்த அக்கறையின்மை என்பது அவர்களது வெளியகதன்னாட்சி உரிமையை ஈழத்தமிழர்கள் உலகளவில் ஏற்கவைப்பதற்கான எந்த பயனுள்ள செயற்திட்டங்களையும் செவயற் படுத்தாதின் விளைவு எனலாம். உண்மையில் 1983 ஜூலை ஈழத்தமிழின அழிப்பை அரசியல் மொழியில் சட்ட மொழியில் பொருளாதார வழியில் வெளிப்படுத்தத் தவறி அதற்கான அனுதாபத்தைப் பெறுவதன் மூலம் அதற்கான நீதியைப் பெறலாம் என்ற ஈழத்தமிழர்களின் அணுகுமுறையும் ஈழத்தமிழர்களுக்கான நீதி கிடைக்காதிருப்பதற்கான காரணமாகவும் உள்ளது. வெறுமனே துன்பங்களைத் துயரங்களைக் காட்சிப்படுத்தி அல்லது எடுத்துரைத்து அரசியலில் நீதி பெற இயலாது. அவை தேவைதான் ஆனால் அதற்கு மேலாக அரசியல் என்பது அதிகாரத்தைக் கட்டமைக்கும் ஒன்று என்ற உண்மை யின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமையின் தன்மையினையும் அதன் ஒடுக்கம் எவ்வாறு உலகில் ஈழத்தமிழர்களினதும் அவர்க ளின் தாயகத்தினதும் பங்களிப்புக்களை இல்லா தொழித்து இன்று தெற்காசியாவின் பாதுகாப்பான அமைதியான வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஆபத்துக்களை ஏற்படுத்தியுள்ளன. இன்றைய சமகால அரசியலில் ஈழத்தமிழர்களின் இறைமை மீள்கட்டமைப்பு உலகின் பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கும் வளர்ச்சிகளுக்கும் முக்கியம் என்ற அடிப்படையில் தங்கள் 1983 ஈழத்தமிழின இனஅழிப்பு வரலாற்றை வரைந்தாலே இந்த இனஅழிப்பு ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல முழு மனித குலத்துக்கும் எத்தகைய சிக்கல் நிலைகளைச் சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்பு தோற்றுவித்துள்ளது என்பது தெளிவாகி உலகம் ஈழத்தமிழர் தேசிய பிரச்சினைக்கான தீர்வு என்பது அனைத்துலகத்தின் தேவை என்ற அடிப்படையில் செயற்படும். இதற்கு ஈழத்தமிழரின் வரலாறு குறித்த உயராய்வு மையம் ஒன்று புலத்தில் அமைக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்கள் புத்திஜீவிகள் அனைத்து ஈழத்தமிழ் மக்கள் என்போரை இணைத்த ஆற்ற லாக அது தன்னை வெளிப்படுத்த வேண்டும் என்பதே இக்கட்டுரையின் அழைப்பாகவுள்ளது.**

• • •

## ஆயுதக் கட்டுப் ... தொடர்ச்சி ...

பாடு தொடர்பான பேச்சுக்களில் சீனா எதிர்வரும் காலங்களில் ஈடுபடாது. அதற்கான சூழ்நிலையை அமெரிக்காவே ஏற்படுத்தியுள்ளது. சீனாவின் கடுமையான எதிர்ப்புக் களையும் மீறி அமெரிக்கா தாய் வானுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்து வருகின்றது என சீன வெளிவிவகார அமைச்சகப் பேச்சாளர் லின் ஜியான் கடந்த புதன்கிழமை(17) தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடை யில் கடந்த தடவை மேற்கொள்ளப்பட்ட பேச்சுக் களின் பின்னர் அமெரிக்கா தாய்வானுக்கு ஒரு பில்லியன் டொலருக்கு மேற்பட்ட ஆயுதங்களை விற்பனை செய்துள்ளது.

அண்மையில் தாய்வானுக்கு அமெரிக்கா பல நூறு ஆளில்லாத தாக்குதல் விமானங்களை விற்பனை செய்ததைத் தொடர்ந்து அமெரிக்கா வின் ஆயுத உற்பத்தி நிறுவனமான லொக்கீட் மார்ட்டின் மீது சீனா தடையை கொண்டு வந்திருந்தது.

## திருமலையில் ... தொடர்ச்சி ...

சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை உப்பு வெளி பொலிஸார் முன்னெடுத் துள்ளனர்

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.